



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 10, இதழ் - 6 நவம்பர் - டிசம்பர் 2024

R4789

## A CITY WITHOUT WALLS
## மதிலிழந்த பட்டணம்

"தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிழந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்."நீதிமொழிகள் 25:28

நமது தலைப்பு வசனத்தில் ஆற்றல் வாய்ந்த உவமானம் காணப்படுகிறது. ஒரு பட்டணத்தில் விசேஷமாக பழங்காலத்தில் ஒருவருக்கொருவர் நன்மைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் கூடி வாழ்வார்கள். கொள்ளையர்கள் கொள்ளையிட தயாராயிருப்பார்கள். பட்டணத்தின் மதிற்சுவர் அதில் வாழ்பவர்களுக்கு அவர்களது சொத்துக்களையும், உரிமைகளையும், நன்மைகளையும் பாதுகாக்க உதவியாயிருந்தது.

இதே நோக்கத்திற்காகவே தேவன் மனிதனை படைக்கும் போது அவனுக்கு ஒரு சித்தத்தை கொடுத்து படைத்தார். அது மனிதனுக்கு தனது சிருஷ்டிகரின் சாயலில் ஒரு அம்சமாக இருக்கிறது. நாம் பலவீனமான சரீரத்தை உடையவர்களாக இருந்தாலும் பலமான உணர்வுகளை உடைய ஒரு சித்தத்தை பெற்றிருக்கிறோம். மற்றவர்களுக்கு வெளிப்படையாக கீழ்ப்படியக்கூடிய நிலைமைக்கு கொண்டு வரப்பட்டாலும் கொண்டு வரப்படாமல் இருந்தாலும் நமது சித்தம் பலமுள்ளதாக இருக்கலாம். நமது சரீரம் அடிமைப்படுத்தப்பட்டு இருந்தாலும் நமது சித்தம் நமது சம்மதம் இல்லாமல் அடிமைப்படுத்தப்பட முடியாது. நமது சித்தம் என்பது நம்மிடமிருந்து எடுக்க முடியாத ஒன்றாக இருக்கிறது. ஆனால் அது பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அது சரி செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது. பலவீனமான இடங்களில் அது பலப்படுத்தப்பட வேண்டியதாக இருக்கிறது.

### சித்தத்தை பலப்படுத்த வேண்டிய அவசியம்

இதை கவனித்து பலப்படுத்தாதவர்கள், தாக்கப்படுவதற்கான சாத்தியங்களைக் காண்பார்கள். இவர்கள் அதிகமாக உடைந்து போய் விரைவில் சித்தமே இல்லாமல் அல்லது சுய கட்டுப்பாடு இல்லாமல் போய்விடுவார்கள். மதிற்சுவர் அழிக்கப்பட்டு எதிரிகள் நுழைந்த அழிந்து போன பட்டணத்தைப் போலே, மனிதன் பாவத்திற்கும் பலவிதமான பலவீனங்களுக்கும், சாத்தானுடைய தாக்குதல்களுக்கும் இடங்கொடுத்து, அவனது மனிதத்தன்மையை இழந்து மற்றும் எல்லாவற்றையும் இழக்கக்கூடிய நிலைமைக்கு செல்வான்.

சத்துருவானவனின் சகல தாக்குதல்களையும் ஒரு புது சிருஷ்டியாக, ஒரு கிறிஸ்தவனாக தாங்கி நிற்பது நமது கடமையாக இருக்கிறது. இந்த தாக்குதல்கள் காணக்கூடிய சக்திகளிடமிருந்து மாத்திரமல்ல கெட்ட ஆவிகளிடமிருந்தும் வருகிறது. நம்மை உடைமையாக்கிக்கொள்ள நாடுகிறவர்களிடமிருந்தும் வருகிறது. அவர்கள் கெட்ட ஆவிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறார்கள். அவர்களுடைய சித்தங்கள் அடங்கிப்போனது, உடைந்த போனது, நமது தலைப்பு வசனத்தில் சித்தரிக்கப்பட்டது போல, அவர்கள் தங்களது சத்துருக்களின் கைகளில் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எதிரியை விரட்டவும், அவனை எதிர்க்கவும் தங்களது சிந்தைகளின் சுவரை பலப்படுத்தவும், உடனே கர்த்தராகிய இயேசுவுடன் உடன்பாடு செய்யவும் முயற்சிக்க வேண்டும். அவர்கள் தங்களது இருதயங்களை முழுமையாகவும் நிறைவாகவும் கொடுத்து, அவரது சித்தத்தையும் வார்த்தையும் வழிநடத்துதலையும் எல்லா காரியங்களிலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உண்மைதான். இப்படியாக அவர்கள் பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகும் போது, அவர்கள் நீதிக்கும் கிறிஸ்துவுக்கும் அடிமைகளாகிறார்கள், நன்மையாகவும், சத்தியமாகவும் சரியானதாகவும் இருக்கக்கூடியவைகளுக்கு ஊழியம் பண்ணுவதையும் பிதாவானவருக்கு இணக்கமாக இருப்பதையும் கிறிஸ்துவுக்கு ஊழியக்காரர்களாயிருக் -கிறவர்கள் உணருவார்கள். தம்முடைய சொந்த இரத்தத்தினால் முழு மனுக்குலத்தையும் விலைக்கு வாங்கினவரின் மூலம் தம்முடைய அன்பை காண்பித்தவரின் கட்டுப்பாட்டின் கீழ் தங்களை தடையின்றி முழுவதுமாக வைத்துக்கொள்வதில் சந்தோஷப்பட வேண்டும். நிச்சயமாக அனைவரும் அவரது கைகளில் பாதுகாப்பாக இருப்பார்கள்!

ஆனால் நம்மை கர்த்தரின் கைகளில் சும்மா ஒப்புக்கொடுத்தால் மட்டுமே போதாது? சங்கீதக்காரன் ஆலோசனை கூறுவதாவது: "உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர் மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். உன் நீதியை வெளிச்சத்தை போல விளங்கப்பண்ணுவார்." (சங்கீதம் 37:5,6) அப்போஸ்தாலர் பவுல் கூறுகிறதாவது: "தேவன், தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையும் உங்களில் உண்டாக்கிறவராயிருக்கிறார்." (பிலிப்பியர் 2:13) அவரது வசனத்தின் வாக்குத்தத்தத்தின் மூலம் கிரியை நடப்பிக்கிறார். நம்முடைய தலையானவரின் சாயலில் குணலட்சணம் அபிவிருத்தியடைய நாம் விரும்பினால், நம்முடைய வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்கள், ஒழுங்குகள், தாழ்த்துகிற செயல்முறைகள் மூலம் நமக்கு வருகிற ஒவ்வொரு பாடத்தையும் கவனிப்பது நலமாயிருக்கிறது.

### "தன் ஆவியை அடக்குகிற மனுஷன் ஒரு பட்டணத்தை பிடிக்கிறவனைக் காட்டிலும் பெரியவானயிருக்கிறான்"

நமது சிந்தைகளை புதுப்பிப்பதின் மூலம் நம்மில் பெரிய மறுரூபமடையும் வேலை நிறைவேற்றுவதில் நாம் தேவனுடன்

உடன் வேலையாட்கள் என்கிற உண்மையை நாம் காணாமல் விட்டுவிடக்கூடாது. நம்முடன் போராடுவதே நமது பெரிய போராட்டமாக இருக்கிறது. அதற்காக நம்முடைய கர்த்தரின் வசனமும் இருக்கிறது. "தன் ஆவியை அடக்குகிற மனுஷன் ஒரு பட்டணத்தை பிடிக்கிறவனைக் காட்டிலும் உத்தமன்." ஏனெனில் சுய கட்டுப்பாட்டின் உண்மையான குணலட்சணத்தின் போராடும் தன்மையை அப்பியாசப்படுத்த அந்த அளவுக்கு கற்றுக்கொண்டிருக்கிறான்.

ஆனால் நமது முன்னேற்றத்தின் மந்தநிலை காரணமாக நாம் உற்சாகம் குன்றாமல் இருக்க வேண்டும். நமது சொந்த சிந்தையை, சொந்த ஆவியை அடக்குவதை அடைதல், இவைகளை நமது முழு கட்டுபாட்டுக்குள் கர்த்தருக்கு முழு இசைவுக்கு கொண்டு வருதல் ஆகும் என்பதை நாம் எப்பொழுது ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் முடிந்தவரை, "முடிவில்" அடைந்தாயிற்று என்று அப்போஸ்தலர் கூறுவது போல கர்த்தருடன் இசைவாக இருக்கக்கூடிய கர்த்தருடைய ஜனங்களுடனும் இணக்கமாக இருக்க வேண்டும். ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையும் தெய்வீக உறுதிமொழியை நம்பி "சோர்ந்து போகாமல் நற்கிரியை செய்வதின்" மூலம் படிப்படியாக அடையப்பெறுகிறது.

இந்த மாபெரும் அபிவிருத்திக்காக முழு சக்தியுடன் நாம் அனைவரும் பாடுபடுவோமாக. நாம் நமக்கு முன்பாக அதை, அந்த நோக்கத்தை, குறிக்கோளை, தரநிலையை வைத்திருக்க வேண்டும். நாம் அவ்வப்போது தோல்வியடையலாம். நாம் சரியானபடி இவைகளை செயல் படுத்தினால் ஒவ்வொரு தோல்வியும் நமக்கு பலத்தைக் கொடுக்கும். நமது விழுகையினால் இயற்கையாக இருக்கக்கூடிய நமது குணலட்சத்தின் பலவீனங்களை நாம் முன்பு உணராதிருந்ததைக் காட்டிலும் இன்னும் அதிகம் தெளிவாக ஒவ்வொரு தோல்வியும் நமக்கு காண்பிக்கும். நமது பலவீனங்கள் சரியானபடி கவனிக்கப்பட்டு, எதிர்காலத்தில் பாதுகாக்கப்பட்டால் சீக்கிரத்தில் நாம் தேவ கிருபையினால் நமது மாபெரும் போதகரின் கீழ் வருவோம். அவருடைய வார்த்தை, உதாரணம் மற்றும் வழிநடத்துதலினால் அந்த தாழ்த்தும் நிலைமைக்கு, இணக்கமாயிருக்கும் நிலைமைக்கு வழி நடத்தும். தேவனுடைய சித்தத்திற்கு முழுவதுமாக இசைந்திருக்கும்.

பின்னோக்கிப் பார்த்து அப்படிப்பட்டவர்கள், தொடர்ந்து உணர்ந்து கொண்ட தோல்விகள், சத்துருவின் தந்திரங்கள் மற்றும் மாம்சத்தின் பலவீனங்களுக்கு எதிராக பெரிய அரணுக்கு வழிநடத்தும். "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" என்கிற வாக்குத்தத்தத்திற்கு ஏற்ப, நமது ஆசீர்வாதத்திற்காக கர்த்தரால் ரத்து செய்யப்படுவதை நாம் காண்போம். (ரோமர் 8:28)

**R4790**

## THE BIBLE IN STONE
## "கல்லில் வேதாகமம்"

"அக்காலத்தில் எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும். அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்." – ஏசாயா 19:19,20

நமது முன்னோர்களை விட நாம் புத்திசாலிகள் என்று நினைப்பது ஒரு தவறாக இருக்கிறது. நாம் நீராவி சக்தி, மின்சார விளக்கு, தந்தி, தொலைபேசி, ஒலிப்பதிவு கருவி முதலானவைகளின் காலத்தில் நாம் வாழ்வதால் நாம் நமது முன்னோர்களை விட நாம் புத்திசாலிகள் என்று சிலர் யூகிக்கிறார்கள். உண்மையைச் சொல்வோமேயானால் நம்மில் மிகவும் சொற்பமானவர்கள் மட்டுமே நமக்கு பிரயோஜனமானவைகளை கண்டுபிடித்திருக்கிறார்கள். பெரிய கண்டுபிடிப்பாளர்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக பரவியிருக்கிறார்கள். திடீரென வந்த உள்ளுணர்வினால்தான் தாங்கள் புதிய கண்டுபிடிப்புகளில் வெற்றி கண்டோம் என்று அவர்கள் நமக்கு கூறுகிறார்கள். அவர்கள் அதற்காக திட்டமிடாமல் கண்டுபிடிப்புகளின் மேல் இடறினார்கள்.

மேலும் நமது கண்டுபிடிப்புகள் எல்லாம் பலரின் சிந்தனைகளாக இருக்கிறது. ஒருவரது கருத்து இன்னொருவருக்கு மூல கருத்தாக இருக்கிறது. அச்சு இயந்திரம், தபால் சேவை சத்திய அறிவை உலகெங்கிலும் பகிர்ந்து கொள்ளுவதற்கு மூலகாரணங்களாக இருக்கின்றன. ஒருவருடைய கருத்து இன்னொருவருக்கு பயனுள்ளதாக இருக்கிறது. நாம் தேவனுடைய ஆயத்தப்படுத்தும் நாளில் இருப்பதால் இந்த காலத்தின் முன்னேற்றத்தை வேதாகமம் நமக்கு விளக்குகிறது. மேசியாவின் ராஜ்யத்திற்காகவும் பிறகு வரக்கூடிய உலகலாவிய ஆசீர்வாதத்திற்காகவும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

### நமது இனம் சீராக அழிந்து கொண்டிருக்கிறது என்பதை புள்ளி விவரங்கள் காண்பிக்கின்றன

உண்மையைச் சொல்வோமானால் மிகவும் முன்னேறிய நாடுகள் சீராக அழிந்து கொண்டிருக்கின்றன என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. மகா பிரிட்டனின் தொப்பி உற்பத்தியாளர்கள் சமீப காலத்தில் கொடுத்த அறிவிப்பின்படி சிறிய தொப்பிகளுக்கு கிராக்கி அதிகரித்தும் பெரிய தொப்பிகளுக்கு தேவை குறைந்து கொண்டும் வருகிறது. இது கடந்த வருடங்களின் பதிவின்படி காண்பிக்கப்படுகிறது. வேதாகம போதனைக்கு எதிராக இருக்கும் பரிணாம வளர்ச்சியின் பலன் என்ற எண்ணத்தைக் கொடுப்பதற்கு உதவி செய்திருக்கிறது. கொஞ்ச காலத்திற்கு முன்னர் நமது முன்னோர்கள் எல்லாம் குரங்குக்கு ஒத்த ஒரு வகுப்பாராக இருந்தனர் என்பது அதன் கொள்கையாக இருக்கிறது.

உண்மைகள் எவை? கவிஞர்களை நாம் தேடினோமானால், அவர்களை எங்கே காண்போம்? "புத்திசாலித்தனம் நிறைந்த யுகம்" என்று அழைக்கப்படுகிற இந்த காலத்தில் ஷேக்ஸ்பியருக்கு சரிசமான கவிஞர்கள் இருக்கிறார்களா? அல்லது சங்கீதக்காரன் அல்லது யோபுக்கு ஒப்பான கவிஞரைக் காணமுடிகிறதா? பரிணாம கொள்கைப்படி, 3500 வருடங்களுக்கு முன் வாழ்ந்த நம்முடைய முன்னோர் ஒரு அறிவுள்ள வாலில்லா குரங்காகத்தான் இருந்திருக்க வேண்டும். இன்னும் கூட மோசேயின் நியாயப்பிரமாணத்தை வாசித்து அவரது நுண்ணறிவு, நீதி, ஞானம் மற்றும் பெருந்தன்மையை யார் தான் சிந்திக்காமல் இருக்கக்கூடும்? நம்முடைய நாகரீக

காலத்தில் மோசேயின் சில நியமங்களை எடுத்துக்கொண்டால் நலமாயிருக்கும். உதாரணத்திற்கு யூபிலி வருடம், இதில் சகல சொத்துக்களும் ஆதி சொந்தக்காரருக்கு போய்ச்சேரும்.

**மகா பிரமிட் முன்னோர்களின் அறிவுத்திறனுக்கான சான்றுகளில் ஒன்று**

எகிப்தின் மகா பிரமிட் நமது முன்னோர்களின் அறிவுத்திறனுக்கான சான்றுகளில் ஒன்றாக இருக்கிறது. பரிணாம கொள்கையின்படி நமது முன்னோர்கள் படிப்பறிவில்லாத குரங்குகளாகத்தான் இருந்திருக்க வேண்டும். இந்த காலத்தில் நவீன இயந்திரங்களைக் கொண்டு மகா பிரமிடைப் போல வேறு ஒன்றை, கல்லுகளுக்கு இடையே இடைவெளி இல்லாமல் கட்ட முடியும். சிந்திக்கக்கூடிய ஒவ்வொருவரும் மகா பிரமிடின் கட்டுமானத்தை ஆராய்ந்து, அதை கட்டியவர்கள் எவ்வளவு நுட்பத்துடன் கட்டியிருக்கிறார்கள் என்பதை அறிந்து ஆச்சரியப்படுவார்கள். அவ்வளவு நுட்பத்துடன் நமது காலத்திற்கு முன்பு கட்டுவது இயலாத காரியமாக இருந்திருக்கும்.

எனினும் மகா பிரமிட் பரிணமாக கொள்கைக்கு எதிரான இன்னொரு சான்றாக இருக்கிறது. நமது வாசகர்கள் வேதாகம பாடங்களில் மூன்றாவது தொகுதியில் கடைசி அத்தியாயத்தை படித்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதன் கட்டுமானத்தில் ஆச்சரியமான நிழலான போதனைகள் காண்பிக்கப்பட்டுள்ளன. பிரமிடானது வேதாகமத்தின் போதனைக்கு இசைவாக இருக்கிறது. உண்மையிலேயே சிலர் இந்த பாடத்தை தொகுதி மூன்றில் படித்தப்பிறகு, பிரமிட், “கல்லில் வேதாகமம்” என்று குறிப்பிடுகிறார்கள்.

**R4794**

## THE SONG OF THE VINEYARD
## திராட்சைத் தோட்டத்தின் பாடல்

ஏசாயா 5: 1-12

“இப்பொழுது நான் என் நேசரிடத்தில் அவருடைய திராட்சைத் தோட்டத்தைக் குறித்து என் நேசருக்கேற்ற ஒரு பாட்டை பாடுவேன்.”

இந்த பாடத்தில், கடைசிவரை, தெய்வீக ஊக்கமளிக்கும் திறவுகோலை நாம் பெற்றிருக்கிறோம். ஏனெனில் தீர்க்கதரிசியே உண்மையாக விவரிக்கிறது போல நமது மாபெரும் போதகர் இந்த வார்த்தைகளை யூத தேசத்திற்கு ஒப்பிட்டு கூறுகிறார். தீர்க்கதரிசி பாடல் என்று கூறுகிறதை ஒரு உவமை அல்லது கதை என்று நாம் சரியானபடி அழைக்கலாம். தேவன் தமது திராட்சைத் தோட்டத்தில் இஸ்ரேல் தேசத்தை நட்டு வைத்தாக குறிப்பிடுகிறார். அவர் கற்களை பொறுக்கினார். அதாவது கஷ்டங்களை நீக்கினார்; அதிலே நற்குல திராட்சை செடியை நட்டு வைத்தார். அதாவது விலையுயர்ந்த வாக்குத்தத்தங்களாகிய மேசியாவின் ராஜ்யம், இஸ்ரேல் மற்றும் பூமியின் சகல ஜாதிகளின் ஆசீர்வாதங்களை கொடுத்திருந்தார். அதற்கு அவர் காவற்கோபுரமாகிய தீர்க்கதரிசனங்களையும், வேலியாகிய நியாயப்பிராணத்தையும் தீர்க்கதரிசிகளையும் கொடுத்து பரிசுத்த ஜாதிக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார். இப்படி நல்ல சாதகமாக அமைந்துள்ள திராட்சைத் தோட்டத்திலிருந்து நல்ல பழங்களை அவர் எதிர்பார்த்தது சரியானதாக இருந்தது. ஆனால் பலனோ திருப்தியற்றதாக இருந்தது. ஆனால் கனிகள் அவரது வாக்குத்தத்தங்களுக்கு இசைவானதாக இல்லை. மாறாக சிறிய, கசப்பான பழங்களை தந்தது.

இந்த நிலைமை இயேசுவின் காலம் வரை நிலவியது. அவ்வப்போது துன்பங்கள் தேசத்திற்கு கர்த்தரால் அனுமதிக்கப்பட்டு வந்தாலும், மீறுதல்கள் சரி செய்யப்பட்டு தேசமானது பாதுகாக்கப்பட்டது. அதன் காவற்கோபுரமும் தெய்வீக பாதுகாப்பு மற்றும் வழிகாட்டுதல் ஆகிய சுவர்களும் எப்பொழுதும் பாதுகாக்கப்பட்டன. யோவான் ஸ்நானன் தான் கடைசி தீர்க்கதரிசி. அவரது காலம் வரை தீர்க்கதரிசனங்களில் குறிப்பிடப்பட்டிருந்த காரியங்களை கர்த்தர் நிறைவேற்றி வந்தார். வேலிகள் உடைத்து போடப்பட்டன. அது பாழாக்கப்பட்டது. அது கவனிக்கப்படாதிருந்தது. புறஜாதி தேசங்களாகிய காட்டு மிருங்கள் இந்த திராட்சைத் தோட்டத்தை நாசமாக்கிப் போட்டன. இந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக தெய்வீக ஆசீர்வாதம், ஆறுதல், ஊக்கம் மற்றும் பலன்களாகிய மழை தேவனால் கொடுக்கப்படாதிருந்தன.

**நல்ல வகைப் பழம்**

கர்த்தர் திராட்சைத் தோட்டத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல வகையான பழம் எது? ஏன் அவர் அதைக் காணவில்லை? இதை நமக்கு தீர்க்கதரிசனத்தில் கூறுகிறார். “சேனைகளின் கர்த்தருடைய திராட்சைத் தோட்டம் இஸ்ரயேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே, அவர் நியாயத்துக்குக் காத்திருந்தார், இதே கொடுமை; “நீதிக்கு காத்திருந்தார், இதோ, முறைப்பாடு.” வேறு வார்த்தைகளில் சொல்வோமேயானால், இஸ்ரயேலர்கள் தேவனுடைய ஜனங்களாக இருந்து அவரது ஆசீர்வாதமான சலுகையை பெறுவதும், அவரது தெய்வீக கிருபையை பெறுவதும், அவர்கள் தெய்வீக பிரமாணத்தை உண்மையாக கடைபிடிப்பதை பொறுத்தே இருக்கிறது என்பதே இஸ்ரயேலருடனான தேவனுடைய உடன்படிக்கையாக இருக்கிறது. பிரமாணங்களை அவர்கள் சரியானபடி கடைபிடிக்கமாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் நல்ல திராட்சைப் பழங்களை பெறமாட்டார் என்பதை அறிந்திருந்தார். அவர் பெற்ற பழங்களை காட்டிலும் மேலானவைகளைப் பெற அவருக்கு உரிமை இருந்தது. அவர்கள் மாம்சீக பலவீனம் உடையவர்களாக இருந்தாலும் இருதய முயற்சியை எதிர்பார்த்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக சர்வ வல்லவரை நேசிப்பது, தன்னைத்தான் நேசிப்பது போல பிறனை நேசிப்பது, சுயநலமற்ற அன்பு ஆகியவையே பிரமாணத்தின் தேவையாக இருந்தது. இந்த பிரமாணத்தை ஆவியின்படியாவது, முடிந்த அளவுக்கு மாம்சீக திராணிக்குதக்கதாக கடைபிடிப்பதே தேவையாக இருந்தது. பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு

இஸ்ரலேயரிடம் அவர் தோன்றியது போது, இப்படிப்பட்ட கனிகளை அவர்கள் கொடுத்திருந்தால், தெய்வீக வாக்குத்தத்தத்தின்படி அப்போதே ஆவிக்குரிய ராஜ்யத்தை அமைக்க தயாராயிருந்திருப்பார்கள். ஆனால் அவர்கள் தயாராயில்லாதிருந்ததால் அவர்களது அனைத்து முறைமைகளையும் உடைக்க வழிநடத்தியது. தேவனிடத்திலும் பிறனிடத்திலும் போதுமான அன்பு உடையவர்களாக அவர்கள் இல்லை.

இஸ்ரயேலர் மற்ற உலகத்தினரைக் காட்டிலும் மிகவும் சீரழிந்த நிலையில் இருந்தனர் என்று நாம் புரிந்துக் கொள்ளக்கூடாது. அதற்கு மாறாக, இது உண்மை என்று நாம் நம்புகிறோம். மற்ற தேசங்கள் எதுவும் விசேஷித்தவிதமாக நடப்பட்டு, வேலியடைக்கப்பட்டு, தண்ணீர் பாய்ச்சப்பட்டு, விசேஷித்த விதமாக பாதுகாக்கப்படவில்லை. எங்கே அதிகமாக கொடுக்கப்பட்டதோ அங்கே அதிகமாக எதிர்பார்க்கப்பட்டது. அதிகமானவர்கள் காணப்படாத போது உண்மையுள்ள சிலர் சேர்க்கப்பட்டு திராட்சைத் தோட்டமானது தற்காலிகமாக கைவிடப்பட்டது. மேசியாவின் ராஜ்யத்தின் மகிமை மற்றும் பரலோக வல்லமையில் அதே திராட்சைத் தோட்டம் இன்னும் அதிக சாதகமான சூழ்நிலைகளில் புதுப்பிக்கப்படும் என்பதை வேத வாக்கியத்திலிருந்து அறிந்து கொள்ளுவதில் நாம் உண்மையிலேயே சந்தோஷம் அடைகிறோம். ஆனால் அது இன்னும் ஒழுங்கின்மையில் இருக்கிறது.

நமது தலைப்பு வசனத்தை தொடர்ந்து வருகிற வசனங்கள் இஸ்ரயேலரின் மனநிலை ஒருவருக்கெதிராக ஒருவர் இருக்கிறதைப் பற்றி குறையாக கூறுகின்றன. இதன் பலனால் சிலர் பெரும் பணக்காரர்களாகவும் சிலர் பரம ஏழையாகவும் ஆயினர். இந்த தீர்க்கதரிசனம் மாபெரும் போதகரின் வார்த்தைகளை ஞாபகப்படுத்துகிறது. "மாயக்கரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ.... விதவைகளின் வீடுகளை பட்சித்துப் போடுகிறீர்கள்." ஏழைகளின் சொத்துக்களை சில சமயங்களில் சட்டத்தின் மறைவில் எடுத்துக்கொள்கிறீர்கள். நீங்கள் தன்னைத்தான் நேசிப்பது போல பிறரை நேசிப்பதோ, ஏழைகளுக்கும் விதவைகளுக்கும். அநாதைகளுக்கும் உதவுவதோ அனைவருடன் பெருந்தன்மையுடன் இருப்பதோ இல்லை. சுயநலத்தின் பாவம் மற்றும் பேராசை கர்த்தரின் ஆவியும் அனைவரிடமும் நல்லெண்ணமும் குறைவுபடுவதை குறிக்கிறது. நமது கர்த்தரின் நாட்களில் பெரும்பாலான யூதர்கள் இப்படிப்பட்ட சுயநலவாதிகளாக இருந்தனர். ஆகையால் அவர்கள் கர்த்தர் அமைக்கிற ஆவிக்குரிய மணவாட்டி வகுப்பாருக்கு தகுதியற்றவர்களாக இருந்தனர். "மீந்திருக்கிறவர்கள்" என்று தீர்க்கதரிசி குறிப்பிடப்பட்டது போல சிலர் மட்டுமே தகுதியுள்ளவர்களாக இருந்தார்கள்.

சுயநலத்தை எப்படி தண்டிப்பார் என்பது குறித்து கர்த்தர் குறிப்பிட்டார். பெரிய சொத்துக்களின் மேல் அழிவு வரும். பூமியானது உழைப்புக்கேற்ற ஊதியம் தராது. இப்படியாக சுயநலமானது பூமிக்குரிய கண்டனங்களையும் பெறும். அதே சமயத்தில் ஆவிக்குரிய சலுகையையும் இழக்கும்.

**ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு கோரிக்கை**

தேவன் மாம்சீக இஸ்ரயேலரை கையாண்ட விதம் தெய்வீக அரசாங்கம் மற்றும் தேவைகளின் கொள்கைகளை மட்டும் குறிப்பிடாமல், வேத வாக்கியங்கள் காண்பிப்பது போல மாம்சீக இஸ்ரயேலரின் ஊழியத்தின் தேவையையும் குறிப்பிடுகிறது. மேலும் அவர்கள் ஆவிக்குரிய இஸ்ரேயலரை நிழலாக காண்பிக்கிறார்கள். சுபாவ இஸ்ரயேலர், இயேசுவின் முதலாம் வருகையில், "மீதியாய் இருப்பவர்களைத்" தவிர அவரை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. அதே போல "கிறிஸ்தவ மண்டலம்" என்று அழைக்கப்படுகிற ஆவிக்குரிய இஸ்ரயேலர் மாபெரும் மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது அவரை ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கமாட்டார்கள். சபையை ஸ்தாபிக்கும் போது சகல சிரமங்களையும் நீக்கி அவர் எடுத்துக்கொண்ட அக்கறையை கவனியுங்கள். மகா மேன்மையும் அருமையுமான பரத்துக்குரிய ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களை அவரது திராட்சைத் தோட்டமாகிய சபையை சுற்றி வைத்ததை கவனியுங்கள். அது பிதாவானவரின் வலது கையினால் நடப்பட்டதை கவனியுங்கள். அப்போஸ்தலர்கள் மூலமாக கிருபையும் சத்தியமுமாகிய காவற்கோபுரத்தை கொடுத்ததை கவனியுங்கள். பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தை கவனியுங்கள்.

யூத யுக முடிவில் மாம்சீக இஸ்ரயேலருக்கு அறுவடை காலம் வந்தது போல, இந்த யுக முடிவில் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு அறுவடை காலம் வருகிறது. அங்கே இருந்ததைப் போல இங்கேயும் "மீதியாய் இருப்பவர்கள்" மாத்திரமே ராஜ்யத்திற்கு தகுதியாக காணப்படுவார்கள். மாபெரும் கிறிஸ்தவ மண்டலம் தகுதியற்றதாக காணப்படும். ஏன்? ஏனெனில் கர்த்தரின் ஆவி, தயவு, சாந்தம் மற்றும் அன்பின் ஆவிக்கு பதிலாக, உலகம் மற்றும் சுயநலத்தின் ஆவியே வியாபித்திருக்கிறது. சிலரிடம் மட்டுமே தேவன் முதலாவதாக இருக்கிறார். சிலரிடம் மட்டுமே தெய்வீக சித்தத்தை செய்யக்கூடிய முழுமையான அர்ப்பணத்தின் ஆவி இருக்கிறது. சிலரிடம் மட்டுமே சகோதர அன்பும் ஒருவருக்கொருவர் ஜீவனை கொடுக்கக்கூடிய விருப்பமும் இருக்கிறது. (யோவான் 15:13) சிலரிடம் மட்டுமே வியாபாரத்தில் கூட நேர்மையும் நியாயமும் இருக்கிறது. தற்காலத்தில் சுயநலம் மட்டுமே குவிந்து கிடக்கிறது. அதன் பலன் திருப்தியற்றதாக இருப்பதாக நிச்சயிக்கிறோம். "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலம்மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் இருக்கும்." (தானியேல் 12:1)

மேலும் தீர்க்கதரிசி காண்பிப்பது போல, ஐசுவரியத்தை சேர்ப்பது ஐசுவரியவான்களுக்கு தீமையை விளைவிப்பதாக இருக்கிறது. அது சோம்பல், இசை, மது மற்றும் தெய்வீக அலட்சியத்தை கொடுக்கிறது. இப்பொழுது "மீதியாய் இருப்பவர்கள்" "தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை" நிறைவு செய்ய போதுமானவர்களாக இருப்பார்கள். மகிமையின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். விரைவில் பூமியின் சகல வம்சங்களும் நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை "ஆபத்துக்காலத்திற்கு" பிறகு பெற்றுக்கொள்ள ஆரம்பிப்பார்கள். "ஆபத்துக்காலம்" கர்த்தரால் உலகத்தை பணிய வைக்கவும் மனுக்குலமானது ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை சரியானபடி பெற்றுக்கொள்ள தயார்படுத்தவும் பயன்படுத்தப்படும்.

R4795

## THE KINGDOM OF PEACE
# சமாதானத்தின் ராஜ்யம்

மீகா 4:1-8

"ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறு ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை."

நாகரீகமும் கிறிஸ்தவ மண்டலமும் காலத்தை வென்றிருக்கிறது என்றும் உலகமானது தேவனுடைய ராஜ்யமாகியிருக்கிறது என்றும் ஆயிரம் வருட யுகத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பது நமக்குரியது என்றும் அகில உலகமும் நீண்ட நாட்களாக பெருமையடித்துக் கொண்டிருக்கிறது. உதவி மாநாடுகள், சமாதான சபை மற்றும் சமாதான ஆணையம் ஆகியவை அழிவதற்காகவே ஒரு இமைப் பொழுதிலே கொழுந்து விட்டு எரிகிறது. "சமாதானம், சமாதானம்" என்கிற சத்தம் சமாதானத்தைக் கொண்டு வரவில்லை. பூமியின் தேசங்கள் எல்லாம் தேவனுடைய ராஜ்யம் என்று நினைத்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள ஆரம்பித்திருக்கிறோம். வேதாகமம் "இந்த உலகத்தின் ராஜ்யங்கள்" புறஜாதி ராஜ்யங்கள் என்று குறிப்பிடுகிறதாயும் மேலும் அது, கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற, "உலகத்தின் அதிபதி" சாத்தான் என்றும் "ஆதிமுதற் கொண்டு அவன் பொய்யனும் சத்தியத்தில் நிலை நிற்காதவனுமாய்" இருக்கிறான் என்றும் கூறுகிறதை நாம் பார்க்க ஆரம்பித்திருக்கிறோம்.

இதையெல்லாம் நாம் பார்க்கிறோம். ஆண்டவர் நம்மை ஜெபிக்கச் சொன்ன தேவனுடைய ராஜ்யம், பரலோக ராஜ்யம் இன்னும் வரவில்லை. அது வரும் என்று கூறி தெய்வீக வாக்குத்தத்தம் உறுதியளித்து விளக்குகிறதாவது: பரிசுத்தமான சிலரை, தகுதியுள்ளவர்களை ஞானமுள்ள சிருஷ்டிகர் மனுக்குலத்திலிருந்து கூட்டிச் சேர்த்து, உலகம் ஆசீர்வதிக்கப்பட வேண்டிய மகிமையின் ராஜ்யத்தில் அவர்களது ராஜாவும் இரட்சகருமானவருடன் இணைக்கப்படுவதற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

ஆனால் எல்லாரும் இந்த வேதாகம சத்தியத்தில் நம்பிக்கையடைவில்லை. சிலர் "தேவனில் நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம்" என்று அறிவிக்கிற பல்வேறு ராஜ்யங்களின் நாணயத்தை குறிப்பிடுகிறார்கள். பல்வேறு சக்கரவர்த்திகளும் ராஜாக்களும் "தேவகிருபையினால்" ஆளுகை செய்கிறார்கள் என்றும் அவர்கள் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் என்றும் கூறுகிறார்கள். போப் கூட தன்னை மேசியா மற்றும் அவரது ராஜ்யத்திற்கு தனிப்பட்ட பிரதிநிதி என்றும் பூமியின் ராஜாக்களை நடத்துவதற்கும் ஆளுகை செய்யவும் தான் ஒருவரே அதிகாரம் உடையவர் என்றும் கூறிக்கொள்கிறார்.

அதிகம் பாரபட்சம் உள்ளவர்களை சமாதானப்படுத்த இந்த திசையில் இன்னும் அதிகம் தேவைப்படுகிறது. தற்கால நிலைமைக்கும், தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்து உலகத்தை இரட்சிக்கும் போது வியாபித்திருக்கிற நிலைமைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை குறிப்பிட்டு அதில் காட்ட வேண்டும். எல்லா வகையான பாவத்தையும் மற்றும் மரணத்தையும் கீழ்ப்படுத்தி, பூமியின் கோத்திரத்தில் விருப்பமும் கீழ்ப்படிதலும் உடையவர்களையும் மாபெரும் மரணத்தின் சிறைவீட்டிற்கு, பாதாளத்திற்கு, ஷியோலுக்கு, ஹேடசுக்கு சென்றிருக்கிறவர்களையும் விடுவித்து உயர்த்தவும் அவர் மகிமையின ராஜாவாக, மேசியாவாக ஆளுகை செய்ய மாபெரும் அதிகாரத்தை எடுத்துக்கொள்வார்.

### நமது சாதகமான தேசத்தில்

அமெரிக்கா தனது ராணுவம் மற்றும் போர்க்கப்பல்கள் மூலம் உலகத்தை வழிநடத்தாது. அதை பயமுறுத்த கிறிஸ்தவ தேசங்களிலிருந்து அச்சுறுத்தல் இல்லாத போது அப்படி செய்ய அவசியமில்லை. இந்த தேசம் ஆயிரக்கணக்கான மைல்கள் சமுத்திரத்தால் சுவர் போல சூழப்பட்டிருந்து போருக்காக அதிகமாக செலவு செய்து கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் கப்பற்படையின் மிக நவீன போர்க்கப்பல் டக்கோடா (Dakota) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இது ஒரு மாகாணத்தின் பெயர். அதன் விலை ஒரு கோடி டாலர்.

பெயரிடப்பட்ட அந்த மாகாணத்தின் வளர்ச்சிக்கு அதை பயன்படுத்தியிருக்கலாம் என்று மினியா போலிஸ் பத்திரிக்கை காண்பிக்கிறது. 25000 டாலரை விவசாய பள்ளி மற்றும் சோதனை பண்ணைக்கும் கொடுத்திருக்கலாம். 175,000டாலரை ஒவ்வொரு பள்ளிக்கும் நன்கொடை நிதிக்கு கொடுத்திருக்கலாம். அது 10500 டாலரை வருடா வருடம் ஒவ்வொரு பள்ளியின் பராமரிப்பிற்கு பயன்படுத்தியிருக்கலாம். இன்னும் 1,000,000 டாலரை மாநில விவசாய கல்லூரிக்கு கொடுத்திருக்கலாம்.

ஐரோப்பாவில் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது. உலகின் கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்படுகின்றவைகளில் ஒருவருக்கொருவரை அழித்துக் கொள்வதற்கான ஆயத்தம், தவறு என்பதை நமக்கு காண்பிக்கவில்லையா? கிறிஸ்தவ தேசம் என்ற வார்த்தை அவர்களுக்கு தவறாக பயன்படுத்தப்படுகிறதா? இந்த விலையுயர்ந்த போர் ஆயத்தம் ஆபத்தினால் அல்ல பயத்தினாலே வழிநடத்தப்படுகிறது.

### மேசியாவின் ராஜ்யத்திற்காக ஜெபியுங்கள்

இந்த பாடத்தில் மனுக்குலத்தின் நம்பிக்கையாக மேசியாவின் ராஜ்யம் விளக்கப்படுகிறது. "கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்" கர்த்தருடைய ஆலயமாகிய ராஜ்யத்தை, அவரது சபையைக் குறிக்கிறது. அது உலகத்தின் ராஜ்யங்களுக்கு மேலாக ஸ்தாபிக்கப்படும். எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள். அதில் எல்லா ஜனங்களுக்கும் ஒரு ஈர்ப்பு இருக்கும். அது அவர்கள் ஏறுவதற்கு வழிநடத்தும், மனுக்குலத்தை ஈர்ப்பது ஆரோக்கியம் மற்றும் மறு சீரமைப்பின் ஆசீர்வாதங்களாகும். இதைஅனைத்து ஜனங்களுக்கும் வழங்குவதற்காக ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

அவர்கள் அதன் தேவைகளுக்கு இசைவாக வருவார்கள். (அப்போஸ்தலர் 3:19-23)

அந்த ராஜ்யம் சீயோன் இயக்கம் மற்றும் பரிசுத்த பூமிக்கு நெருக்கமாக அடையாளம் காணப்படும். ராஜ்யமானது ஆவிக்குரியதாக, மனிதருக்கு காணப்படாததாக இருக்கும். ஆனால் பூமிக்குரிய முகவர்கள் யூதர்களாக இருப்பார்கள். "நீங்கள் ஆபிரகாமையும். ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் ராஜ்யத்தில் இருக்கிறவர்களாக காண்பீர்கள்." (லூக்கா 13:28) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு தூண்டப்பட்டவர்கள் அங்கு அதிகமாக செல்வார்கள். விசுவாசம் உள்ள அனைவரும் நிதி உதவியுடனும் தயவுடனும் பிரதிநிதித்துவத்துடனும் செல்வார்கள். இஸ்ரேலிய நம்பிக்கைகளும் வாக்குத்தத்தங்களும் அவர்களை முதலில் பலமுடன் ஈர்க்கும். படிப்படியாக அருளப்படுகிற தேவனுடைய கிருபையும் மறுசீரமைப்பின் ஆசீர்வாதங்களையும் அறிந்துகொண்டு கூறுவதாவது: "நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். நாம் அவரது பாதைகளில் நடப்போம். ஏனெனில் சீயோனிலிருந்து கர்த்தரின் வேதமும், எருசலேமிலிருந்து யேகோவாவின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:3; மீகா4:2)

### தேவ சமாதானம் ஸ்தாபிக்கப்பட்டது

மேசியாவின் ராஜ்யத்தின் நியாயந்தீர்ப்பு, நீதியாயும் அநீதியை கண்டிக்கக்கூடிய தேசங்களுக்கு சாதகமாகவும் இருக்கும் என்று 3வது வசனம் கூறுகிறது. அதன் பலனால் போர்கள் இல்லாதிருக்கும். அழிக்கும் பட்டயங்கள் எல்லாம் கலப்பைகளாகவும் கத்தரிக்கும் கொக்கிகளாகவும் மாற்றப்படும். இனிமேல் மனித இரத்தம் பூமியில் சிந்தாது. இனத்தின் ஆசீர்வாதத்துக்காக பூமி உழப்படும். அச்சுறுத்தலும் பயமுறுத்தலும் இருக்காது. அந்த காலத்தின் ஆரம்பத்தில், நாம் ஒவ்வொருவரும் தேவனைப்பற்றிய சொந்த கருத்தை பின்பற்றுவார்களாக என்றும், இஸ்ரயேலர் மட்டும் யேகோவாவை பின்பற்றட்டும் என்றும் கர்த்தரின் பிள்ளைகள் கூறுவார்கள். அந்த காலத்தில் அவர் அவர்களை "மீதமாக இருக்கிறவர்களை" கூட்டிச் சேர்ப்பார். பிறகு கர்த்தர் சீயோனில் அவர்களை ஆளுகை செய்வார்.

ஆதியில் ஆதாமுக்கு ஆதிக்கம் கொடுக்கப்பட்டது. ஆனால் அது பாவத்தினால் இழக்கப்பட்டது. இயேசு, தமது மரண பரியந்தமாக கீழ்ப்படிதலினால் அவர் தேவனுடைய பிள்ளைகளுக்கு பலமான கோபுரமும், கோட்டையும், பாதுகாப்பும் ஆனார். "முந்தின ஆளுகை அவரிடத்தில் வரும்." அவர் ஆயிரம் வருடம் ஆளுகை செய்து, விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ள அனைவரையும் ஆசீர்வதித்து உயர்த்துவார்.

**R4796**

## GOD WORKS - WE WORK

## தேவன் கிரியை செய்கிறார் - நாம் பிரயாசப்படுகிறோம்

"பிரியமானவர்களே, ... அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்; ஏனெனில், தேவனே தமது தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்கிறவராயிருக்கிறார்." (பிலிப்பியர் 2:12,13)

சுவிசேஷ சபை, "பரம அழைப்புக்கு" அழைக்கப் -பட்டிருக்கிறது. அழைப்பை ஏற்றுக்கொள்ளுகிறோம் என்பது நாம் அதை உணர்ந்து அதை விரும்பப்படத்தக்கதாக கருதுகிறோம் என்பதை குறிக்கிறது. நாம் பெற்றிருக்கிற அனைத்தையும் நாம் அர்ப்பணிப்பதில்தான் அதன் நிபந்தனை இருக்கிறது. இந்த நிபந்தனைகளை நாம் ஏற்றுக்கொண்டதின் மூலம், இப்படியாக நமக்கு கொடுக்கப்பட்ட மாபெரும் சந்தர்ப்பத்தை உயர்வாக மதித்தலை நாம் நிரூபிக்கிறோம். ஆகையால் தேவன் அந்த அழைப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார் என்பதாலேயே அந்த அழைப்பு நமக்கு வந்திருக்கிறது என்று நாம் உணர்ந்துகொள்கிறோம். ஆகையால் நமது "தெரிந்துகொள்ளுதலை உறுதிப்படுத்த" இந்த நிபந்தனைகளை நாம் புரிந்து கொள்ளுவது முக்கியமானதாக இருக்கிறது.

இதை இறுதிவரை நிறைவேற்ற நாம் சில வகையான வேலையை செய்ய வேண்டும் என்று நமது தலைப்பு வசனம் கூறுகிறது. நமது மீட்புக்காக பிரயாசப்பட வேண்டும். நமது முயற்சிகள் இல்லாமல் மகிமைக்கு நம்மை எடுத்துச் செல்ல தேவன் நோக்கங்கொள்ளவில்லை. இந்த வெறும் முயற்சிகள் மட்டுமே நம்மை அங்கே கொண்டு செல்லாது என்பது உண்மைதான். ஆனால் மறுபுறம், நாம் கடுமையாக முயற்சிக்காவிட்டால் மகிமையானவைகளை நாம் பெறமாட்டோம். ஆகையால் பரிசுக்காக நாம் "பிரயாசப்படவேண்டும்," "உழைக்க வேண்டும்," "முயற்சிக்க வேண்டும்" என்பதே உபதேசமாக இருக்கிறது. தெய்வீக பிரமாணத்தை கைக்கொள்ள நாம் எவ்வளவுதான் முயன்றாலும் நமது வெறும் சிறந்த முயற்சி மற்றும் ஆசை வெற்றியை கொண்டு வராது. ஆனால் நம்மை அழைத்தவரே அதை நிறைவேற்ற செய்கையையும் விருப்பத்தையும் உண்டாக்குகிற வேலையை நம்மில் ஆரம்பித்திருக்கிறார் என்று நாம் உறுதியளிக்கப்படுகிறோம்.

ஆகையால் நாம் மட்டுமே நமது இரட்சிப்புக்காக வேலை செய்யவில்லை. தேவன் நம்மில் கிரியை நடப்பிக்கிறார். முன்னரே நம்மில் கிரியை ஆரம்பித்திருக்கிறார். உயிர்த்தெழுப்பும் வல்லமையுடன் இந்த உண்மையை அவரது வாக்குத்தத்தம் உறுதி பண்ணுகிறது. நாம் விரும்புவதற்கு மாத்திரம் அவர் நம்மில் கிரியை செய்யாமல், நாம் அர்ப்பணம் செய்தது போல நாம் கிரியை நடப்பிக்கவும் நம்மில் கிரியை நடப்பிக்கிறார் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அதாவது நல்ல நோக்கம் மட்டும் போதாது, நம்முடைய குணலட்சண அபிவிருத்திக்கு பிரயோஜனமாக இருக்கும்படி நமது நடைமுறை வாழ்க்கையில் அப்பியாசப் படுத்தப்பட வேண்டும். இப்படியாக தேவன் நம்மில் கிரியை நடப்பிக்கிறார். சபையை கட்டி எழுப்பவும் நமது "அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தவும்" தற்காலத்தில் நாம் இப்படியாக தேவனுடன் உடன் வேலையாட்களாக இருக்கிறோம்.

### பின்வாங்கிப் போனவனாக காணப்படாதபடி நாம் பயந்திருக்கக்கடவோம்

"நமது இரட்சிப்புக்காக பயத்துடன்" பிரயசாப்பட வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்கு அறிவுறுத்துகிறார்.

வேதவாக்கியங்கள் அறிவிக்கிறதாவது: "கர்த்தருக்குப் பயப்படுதலே (பயபக்தி) ஞானத்தின் ஆரம்பம்." (நீதிமொழிகள் 9:10) சர்வ வல்லவரைப் பற்றிய நமது முதலாவது எண்ணம் அவரது மகத்துவத்தையும் நமது அற்பமான தன்மையையும் நினைப்பதாகும். அவரது திட்டத்தையும் ஏற்பாடுகளையும் நாம் அறிய வருவதால், இந்த வகையான பயம் மரியாதைக்கும் அன்புக்கும் இடங்கொடுக்கிறது. ஏனெனில் அவரது உபயோகரமான ஏற்பாடுகளுக்கும் நோக்கங்களுக்கும் இசைவாக இருக்க இணங்குகிற அனைவரிடத்திலும் அவர் மிகுந்த கிருபையுள்ளவராக இருக்கிறார். அவர் மகிமையான திட்டங்களை தீட்டியிருக்கிறார் என்பதையும் அவை அனுதினம் கிரியை நடப்பிக்கின்றன என்பதையும் அதில் நமக்கும் பங்கு இருக்கிறது என்பதையும் நாம் காண்கிறோம். எனவே, இந்த வகையான பயம், அச்சத்தை நீக்குகிறது.

எனினும் கிறிஸ்தவ வழியில் முன்னேறாத கிறிஸ்தவ ஜனங்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தப்பறையான போதகங்களினால் கட்டப்பட்டிருக்கிறார்கள். இவர்களைக் குறித்து வேதவாக்கியங்கள் கூறுகிறதாவது: "அவர்கள் எனக்கு பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது." (ஏசாயா 29:13) தேவனைப் பற்றியும் அவரது குணலட்சணத்தை பற்றிய அறிவும் இவ்வகையான பயத்தை அகற்றும்.

நமது தலைப்பு வசனத்தில் "பயம்" மகிமையான வாக்குத்தத்தின் தேவையற்ற பயமாக காணப்படுகிறது. இந்த பயம் தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுவதில் தோல்வி அடையும்படி செய்கிறது. "ஆனபடியால், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாக காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" என்று அப்போஸ்தலர் நமக்கு ஆலோசனை கூறுகிறார். (எபிரேயர் 4:1)

நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறவைகள் எவ்வளவு மகத்தானதாகவும் ஆசீர்வதிக்கப்பட்டவைகளாகவும் இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் நமது இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுவோமாக." இல்லையென்றால் இந்த ஆச்சரியமான சந்தர்ப்பமாகிய கனம், மகிமை, சாகாமையை இழப்போம் என்பதையும் உணர்வோம். நாம் பெரிதாக விரும்புகிறதற்கு போதுமான அளவு மதிப்புடையதாக இருக்கக்கூடியதைக் குறித்த நமது மனோபாவம் அதன் மேல் அதிக அக்கறையுடன் இருப்பது தகுதியாயிருக்கிறது. இந்த விஷயத்தில் பயம் என்பது நேரடியான நடுக்கத்தை குறிக்காதபடி நம்மை எச்சரிக்கை பண்ணுவதாக இருக்கிறது. பரிசுக்காக பந்தயத்தில் ஓடுவதற்கு நாம் தைரியம் உடையவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் அது நமது முன்னேற்றத்தை தடுக்கக்கூடிய அல்லது பந்தயத்தை விட்டுவிடக்கூடிய எதையாவது நாம் அனுமதித்து விடக்கூடும். இந்த மார்க்கம் நமக்கு அழிவை ஏற்படுத்தும். மாபெரும் பரிசை உணர்ந்து, அது நம்மை விட்டு நழுவி விடாதபடிக்கு, நாம் அதை இழந்து விடாதபடிக்கு நாம் அச்சம் கொள்ளாமல் பயந்து இருக்க வேண்டும்.

## நமது கர்த்தர் தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்

பயத்துடன் எப்பொழுதும் இணைக்கப்படுகிற அதே வகையான கவனிப்பு நம்முடைய கர்த்தரின் விஷயத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது குறித்து நாம் விசுவாசிக்கிறதாவது: "அவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் பண்ணி, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (எபிரேயர் 5:7) தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் தோல்வி அடைந்திருப்போமோ என்று அவர் பயந்தார். கனம், மகிமை மற்றும் சாகாமையை அடைவதற்காக பிதாவானவரின் சித்தத்தை பூரணமாக நிறைவேற்றுவதில் தாம் தவறியிருப்போமோ என்று பயந்தார். அவரது மரணம் இரண்டாம் மரணமாக இருக்குமோ என்று பயந்தார். அவரது பயபக்தியினிமித்தம் அவர் கேட்கப்பட்டு, அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்த ஒரு தேவதூதன் அனுப்பப்பட்டார். அச்சத்தை அல்லது நடுங்கக்கூடிய பயத்தை பிதாவானவரிடம் அவர் அனுபவிக்காதது போல, அவரை நேசிக்கக்கூடிய அனைவரிடமும் அது இருக்க வேண்டும்.

"நமது இரட்சிப்பு நிறைவேற நாம் பிரயாசப்பட வேண்டும்" என்று நமது தலைப்பு வசனம் கூறும் போது, நாம் நாடுகிற பரிசு "ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு கிரியைகளினால் உண்டானதல்ல" என்று இன்னொரு வசனம் கூறுகிறது. (எபேசியர் 2:9) எனினும் இந்த இரண்டு வசனங்களும் இசைவற்றதல்ல. நமது சொந்த இரட்சிப்புக்கு நமது கர்த்தரைப் போல தனியாக பிரயாசப்பட வேண்டும் என்று எந்த வேதவாக்கியங்களும் கூறவில்லை. கிறிஸ்துவின் பூரண கிரியை நமது கிரியைக்கு அடிப்படையாக இருக்கிறது. அவர் நம்மை விடுவித்திருக்காவிடில் நித்திய ஜீவனுக்காக நம்பிக்கையின் அடிப்படையே நமக்கு இருந்திருக்காது.

ஆகையால் நமது "பரம அழைப்பின்" பந்தயப்பொருளை நாம் அடைவது சில நிபந்தகைளை சார்ந்திருக்கிறது. அதை அடைவது நமது சொந்த பூரணத்தையோ அல்லது நம்மால் செய்ய முடிகிற எதையுமோ சார்ந்து இருக்கவில்லை. நாம் அபூரணர் என்பதை அறிவதும், நமது மாபெரும் பரிகாரி தமது புண்ணியத்தை நம்மேல் சாட்டியதின் மூலம் நம் பிதாவானவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமே அடிப்படையாக இருக்கிறது.

தேவனே, கிறிஸ்து இயேசுவுக்குள் இரட்சிப்பை அருளியிருக்கிறார். தேவனே நம்மை அவரிடத்தில் இழுத்து, சுயபலி மூலம் இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றும்படி நமக்கு கிருபை அளித்திருக்கிறார். நாம் காண்பித்திருக்கிறபடி, ஜாக்கிரதையுடனான பயத்துடன் நாம் நமது இரட்சிப்புகாக பிரயாசப்படுகிறோம். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிருபை எப்பொழுதும் நமக்கு தேவை என்பதையும் நாம் உணருகிறோம். நீதிக்கான நமது பெரும் முயற்சிகள், விசுவாசத்தினால் நமக்கு சாட்டப்பட்ட கிறிஸ்துவின் நீதியின் புண்ணியத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே தேவனுக்கு பிரியமாயிருக்கும் என்று நாம் நம்பிக்கை கொள்ளுகிறோம். (எபிரேயர் 4:16; எபேசியர் 2:8)

R4797

## BLAMELESS AND HARMLESS, WITHOUT REBUKE

## குற்றமற்றவர்களும், கபடமற்றவர்களும், மாசற்றவர்களும்

"ஜீவவசனத்தை பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருங்கள்." பிலிப்பியர் 2:14,15

குற்றமற்றவர்களாயிருப்பதற்கு தீமை செய்யும் மனோபாவம் இல்லாதிருக்க வேண்டும். கோபம், வன்மம், பகைகள் மற்றும் சண்டைகளால் கட்டுப்படுத்தப்படக்கூடாது. மாறாக, நாம் தொடர்பு கொள்ளுகிற அனைவருக்கும் முடிந்த வரை நன்மை செய்கிறவர்களாயிருக்க வேண்டும். நாம் தேவனுக்கு மாத்திரமல்ல, சகோதரருக்கு மாத்திரமல்ல, முடிந்தவரை உலகத்தின் பார்வையிலும் நாம் மாசில்லாதவர்களாக இருக்க வேண்டும். உலகத்தாருக்கு முன்பாக நாம் பிரகாசிக்க வேண்டும்.

குற்றமற்றவர்களாயிருந்தால் பூரணத் தன்மையை, அர்த்தப்படுத்ததாது. ஒருவர் குற்றமற்றவராயிருந்து, சுபாவ பலவீனத்தினால் அபூரணராக இருக்கக்கூடும். தேவனுடைய பார்வையில் குற்றமற்றவர்களாயிருப்பதற்கு, நீதி, அன்பு மற்றும் தயை எப்பொழுதும் நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். உலகத்தார் நமது கர்த்தரைப் பற்றி தவறாக பேசியது போல நம்மைப் பற்றியும் தவறாக பேசுவார்கள்; நம்மை வெறுப்பார்கள். ஏனெனில் இருளானது எப்பொழுதும் வெளிச்சத்தை வெறுக்கும். நாம் உலகத்துடன் நட்பு கொண்டால் நாம் தேவனோடு உடன்படிக்கையில் இல்லை. அப்போஸ்தலர் யாக்கோபு கேட்கிறதாவது: "உலக சிநேகம் தேவனுக்கு பகை என்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்கு சிநேகிதராயிருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாயிருக்கிறான்." (யாக்கோபு 4:4) நாம் தேவனுக்கு சிநேகிதராயிருந்தால், உலகமானது, நம்மை தீமை செய்பவர்கள் என்று எண்ணி நம்மை காயப்படுத்த நாடுவார்கள். "எத்தர் எண்ணப்பட்டாலும் நிஜஸ்தராக" இருக்கிறோம். "உலகத்திற்கு நாம் சிநேகிதராக" இல்லாதிருந்தாலும் கூடுமானவரை அவர்களோடு சமாதானமாயிருக்க முயற்சிக்க வேண்டும்.

எனினும் நாம் எல்லோரையும் சந்தோஷப்படுத்த முடியாது. ஜனங்களிடையே நன்கு தீர்மானிக்கிறவர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டவர்களால் நாம் குற்றமற்றவர்கள் என்று காணப்பட வேண்டும். நமது கர்த்தரிடமும் இப்படியே இருந்தது. உலகம் அவரை குற்றம் சுமத்தினாலும், அவர்கள் தங்கள் தனிப்பட்ட கருத்தில் அவரை குற்றமற்றவர் என்று அங்கீகரித்தார்கள். அவருக்கு மரண தண்டனை கொடுத்த பிலாத்து கூட, நேர்மையானவராக கூறினதாவது: "இவன் என்ன பொல்லாப்பு செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே;" "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன்." (லூக்கா 23:22; மத்தேயு 27:24)

நமக்கு எதிராக என்னவிதமான குற்றச்சாட்டு சொல்லப்பட்டாலும், வக்கிரமான மனதுடையவர்கள் மட்டுமே நம்மைக்குறித்து தவறாக நினைக்கும்படி நம்முடைய நடத்தையானது உலகிற்கு முன்பாக இருக்க வேண்டும் என்பது நாம் பார்த்துக்கொண்டிருக்கிற வசனத்தில் அப்போஸ்தலரின் கருத்தாக இருக்கிறது. நேர்மையான மனதுடையவர்கள் நம்மை நீதியானவர்களாக நினைக்கிறார்கள். கர்த்தருடைய ஜனங்களின் வாழ்க்கை குற்றமற்றதாக குற்றஞ்சாட்டப்படாததாக இருக்கிறது என்பதை கவனிக்கிறார்கள்.

சீஷர்கள் தங்களது சொந்த யூத தேசத்தில் வக்கிரமான மனதுடையவர்கள் மத்தியில் வாழ்ந்தார்கள். அவர்களிடையே, சகமனிதர்களுக்கு அவர்களது வாழ்க்கை வெளிச்சமாயிருக்கும்படி அவர்கள் நடக்கவேண்டியிருந்தது. வக்கிரத்தன்மை கர்த்தரால் வழிநடத்தப்படுவதை விரும்பாததை குறிக்கிறது. நேர்மையின்மை என்பது எப்பொழுதுமே தீமையை செய்வதை குறிக்காமல் தீமையையும் நன்மையை மாறி மாறி செய்கிறவர்களை குறிக்கிறது. ஒரு வகையில் அவ நம்பிக்கையின் தீமையான இருதயம் இன்னொரு வகையில் உருவங்கள் மற்றும் சடங்குகள்.

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்த நிலைமைகள் கர்த்தருடைய ஜனங்களால் பின்பற்றப்பட்டு வந்தன. எங்கு பார்த்தாலும் நேர்மையின்மையும் சுயசித்தமுமே இருக்கின்றன. கர்த்தருடைய சித்தத்திற்கு எதிராகவே அநேக காரியங்கள் செய்யப்படுகின்றன. இந்த நிலைமைகளுக்கிடையே கர்த்தருடைய பிள்ளைகள் வெளிச்சமாக பிரகாசிக்க வேண்டும். அவர்கள் கர்த்தருடைய வழிகளில் நடக்க நாட வேண்டும். அவர்கள் "தங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டும்."

R4797

## GIANTS IN THE EARTH

## பூமியில் இராட்சதர்கள்

"நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்." லூக்கா 17:26

நோவாவின் நாட்களில் நடந்தது போல அவருடைய பிரசன்ன காலத்தில், யுக முடிவில் நடக்கும் என்று நமது கர்த்தரின் அறிக்கையை கவனிக்கும் போது, அவரது பிரசன்னத்தை உலகம் அறியாது என்பது கவனிக்கப்பட வேண்டும். ஏனெனில் இந்த குறிப்பிட்ட வசனம் கீழ்க்கண்டவாறு வருகிறது. "ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்தில் .... ஜனங்கள் புசித்தும், குடித்தும், பெண் கொண்டும் பெண் கொடுத்தும் ......... உணராதிருந்தார்கள். இப்படியே மனுஷகுமாரன் வரும் (பிரசன்னம் – பரவுசியா) காலத்திலும் நடக்கும்." (மத்தேயு 24:37-39)

இந்த அறிக்கை புசித்தல், குடித்தல் முதலானவைகளை தவறு என்று குறிப்பிடாமல், யுக முடிவின் நெருக்கடியில் எந்தவித தொந்திரவையும் மனிதன் அறியமாட்டான் என்பதே. ஜலப்பிரளய காலத்தில், முதல் யுகத்தின் முடிவில் ஒரு பெரிய ஆபத்து வரப்போகிறது என்கிற ஒரு அறிகுறியே இல்லாதிருந்தது. அப்பொழுது பேரிடர் தவிர்க்க முடியாததாக இருந்தது போல, இப்பொழுதும் அது தவிர்க்க முடியாததாக இருக்கிறது என்று கர்த்தர் நமக்கு கூறுகிறார்.

முதல் உலகத்தின் முடிவும் தற்கால உலகத்தின் முடிவும் ஆச்சரியப்படத்தக்கதாக ஒரே மாதிரி இருக்கிறது. முதல் உலகத்தின் முடிவுக்கு முன்னால் (தேவ தூதர்களின்) மனித சக்தியை மீறிய செல்வாக்கு இருந்தது. தூதர்களின் வல்லமையினால் மிகவும் விரும்பப்படத்தகாத நிலைமைகள்

உண்டாக்கப்பட்டிருந்தன. ஆதரிக்கப்படாத “புகழ் பெற்ற மனிதர்கள்” மற்றும் “இராட்சதர்கள்” ஒரு புது இனம் உண்டாயிருந்தது. (ஆதியாகமம் 6:1-4) இன்றைக்கும் இப்படிப்பட்ட நிலைமையை நாம் பார்க்கிறோம். தீய மனப்பான்மையுள்ள மானிட மனதில் எந்த அளவுக்கு நுழைந்திருக்கிறதோ அந்த அளவுக்கு தீய நிலைமை (இராட்சத) பிரமாண்டமான அளவில் உண்டாயிருக்கிறது. முழு உலகிலும் எங்கேயாவது, கர்த்தரின் ஆவி மற்றும் சத்திய ஆவிக்கும் தொடர்புக்கு வந்தவர்களைக் காட்டிலும் அதிகமான அறிவுத்திறனை நாம் காணமுடிகிறதா? ஆனால் இந்த அறிவின் ஆவி தீய மனதில் நுழையும் போது, தீமை பயக்கிறது.

இந்த ஆவி புகழ் பெற்ற மனிதர்களையும் புத்திசாலித்தனம் உள்ள மனிதர்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் ஆச்சரியமான காரியங்களை செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். நமது காலத்தின் குறிப்பிடத் தகுந்த சாதனைகள், எல்லா வகையான ஆச்சரியமான கண்டுபிடிப்புகள் கர்த்தரின் ஆவி பூமிக்கு அனுப்பப்படாமல் சாத்தியமில்லை. ஆனால் இந்த இணைப்பின் பொதுவான போக்கு, தீய மனதில் அறிவின் ஆவி, இராட்சதர்களை உருவாக்கியிருக்கிறது. அவர்கள் தேசத்தில்“மேலேயும் கீழேயும்” நடக்கிறார்கள் அவர்கள் சர்க்கரை டிரஸ்டு (Sugar Trust) நிலக்கரி டிரஸ்டு (Coal Trust) முதலானவைகள் என்று அறியப்பட்டிருக்கிறார்கள். நோவாவின் நாட்களில் ராட்சதர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது போல, இப்போது நிலைமை ராட்சதர்களின் கட்டுப்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது இருந்ததைப் போல, இப்பொழுது ராட்சதர்கள் உலகம் முழுவதையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியவர்களாயிருக்-கிறார்கள். ஜலப்பிரளயம் அந்த இராட்சதர்களை அழித்தது போல, இப்பொழுது மனுக்குலத்தை ஒடுக்குகிற டிரஸ்டுகள் மற்றும் வியாபார ஏஜென்சிஸ் மகா ஆபத்தில் மூழ்கடிக்கப்படும். அவர்கள் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள் என்று வாசிக்கிறோம். அவர்கள் திரும்பி எழும்பக்கூடிய நம்பிக்கையே இருக்காது.

**R4797**

## INTERESTING QUESTIONS
## ஆவலைத் தூண்டும் கேள்விகள்

**கேள்வி :** ஆதாம் தெரிந்தே பாவம் செய்ததால் தனிப்பட்ட முறையில் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை அவருக்கு நிறைவேற்றப்பட்டதால் அவர் அந்த தண்டனைக்கு கீழாக இருக்கிறார். இப்பொழுது அவர் எதையும் பெற்றிருக்கவில்லை. அவர் ஒன்றுமே இல்லை. அவர் தண்டிக்கப்பட்ட நிலைமையிலிருந்து அவர் விடுவிக்கப்பட கிறிஸ்துவின் புண்ணியத்தில் எவ்வளவு தேவைப்படும்?

**பதில் :** ஆதாம் சோதிக்கப்பட்டு, குற்றவாளியாக காணப்பட்டு, மரண தண்டனைக்குள்ளானார் என்பதை நாம் புரிந்து கொள்ளுகிறோம். அதை மாற்ற அவர் எதுவும் செய்யவில்லை. அவரை விடுவித்து இன்னொரு சோதனைக்கு அனுமதிக்க முழுமையான மீட்கும் பொருளின் விலைக்கிரயம் தேவைப்படுகிறது. பொதுவான முறையில் பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் இதே நிலைமையில் இருப்பது உண்மை. சபை மற்றும் நியாயப்பிரமாணத்திற்கு கீழாக இருக்கும் யூத இனத்தை தவிர மற்ற அனைவரும் ஆதாமின் பிள்ளைகள் என்ற வகையில் நாம் அனைவரும் ஒரு இனமாக பாவிக்கப்படுகிறோம்.

இப்பொழுது கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்படுவது போல ஆயிர வருட யுகத்தில யாருக்கும் அது சாட்டப்படாது. ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக அது நமக்கு சாட்டப்படுகிறது. நாம் பிரியமான பலிகளை செலுத்துவதற்காக ஆகும். ஆயிர வருட யுகத்தில் ஒருவர் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இன்னொருவருடைய நீதி தேவைப்படாது. மாறாக, அகில உலகமும் ஒன்றாக கருதப்பட்டு, அதே நிலைப்பாட்டில் கையாளப்படும். கிறிஸ்து, மகா மத்தியஸ்தர், தீர்க்கதரிசி மற்றும் ராஜாவாக இருந்து, ஆதாமையும் அவரது பிள்ளைகளையும் ஒன்றாக கருதி, நீதியின் கையில் மீட்கும் பொருளை கொடுப்பார். நீதிக்கு மீட்கும் பொருளை கொடுத்த பிறகு, இப்படியாக மனுக்குலத்தின் முழு உலகத்தையும் வாங்கி, புது உடன்படிக்கையின் மகா மத்தியஸ்தர் அதை அமுலுக்கு கொண்டு வந்து, இப்படியாக அந்த புது உடன்படிக்கைக்கு கீழாக ஆசீர்வாதம் இஸ்ரயேலுடன் ஆரம்பமாகும். இதுவரை காண்பித்த பிரகாரம் மனித இனத்தில் ஒவ்வொரு அங்கமும் பூரணத்திற்கு வருவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை பெறுவார்கள்.

கேள்வியின் சரியான சாராம்சத்திற்கு விஷயத்தை இன்னொரு வகையில் வைக்கிறோம். ஆதாம் சுவிசேஷ யுகத்தில் இருந்திருந்தால், சுவிசேஷ யுகத்தின் சலுகைக்கு அவர் தகுதியானவராக இருந்திருக்க மாட்டார். சபையை கர்த்தர் கையாளுவது போல ஆதாமை கையாளுவது தெய்வீக ஏற்பாட்டிற்கு இசைவாக இருந்திருக்காது. ஏனெனில் அவர் நேரடியாக தண்டிக்கப்பட்டதால், பலியாக கொடுப்பதற்கு அவரிடம் எதுவுமே இல்லை. மாறாக நாம் “நமது சரீரங்களை ஜீவ பலியாக” கொடுக்கக்கூடியவர்களாக இருக்கிறோம். நாம் அர்ப்பணிக்க விரும்புகிற சரீரத்தைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவோடு கூட பாடுபட அனுமதிக்கப்பட்டால் அவரோடு கூட மகிமையில் பங்கு பெறுவோம் என்பதே நமது நம்பிக்கையாக இருக்கிறது

அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “நீங்கள் உங்களுடையவர்களல்ல; கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்கள். ஆகையால் உங்கள் சரீரங்களினால் தேவனை மகிமைப்படுத்துங்கள்.”(1கொரிந்தியர் 6:19,20) இது, நாம் ஏதோ ஒன்று என்று குறிப்பதாக காணப்படுகிறது. கிறிஸ்துவை தேவனுடைய திட்டங்களுக்கு மையம் என்றும் நம்முடைய இரட்சகர் என்றும் அங்கீகரித்து, நமது ஜீவன், மற்றும் நமது சரீரத்தை அவரது ஊழியத்துக்கு அர்ப்பணிப்பது மூலம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். ஆனால் நாம் ஆதியிலே பாவியாயிருந்தால், ஆதியிலே தண்டிக்கப்பட்டிருந்தால், கொடுப்பதற்கு நம்மிடம் எதுவுமே இருந்திருக்காது..

**கேள்வி:** ஞாயிறு வகுப்புகளில் சகோதரிகள் போதிக்கலாமா?

**பதில் :** பொதுவாக பிள்ளைகளுக்கு போதிப்பதில் சகோதரர்களைக் காட்டிலும் சகோதரிகளே சிறந்தவர்கள். இப்படிப்பட்ட வகுப்புகளில் அவர்கள் போதிக்க வேத வாக்கியங்களில் தடை ஏதும் சொல்லப்படவில்லை. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “உபதேசம் பண்ணவும் புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்தீரியானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை.” அவருடைய வார்த்தைகள் விசேஷமாக சபைக்கு மட்டுமே பொருந்தும்.

ஞாயிறு பள்ளியைப் பற்றிய அறிவுறுத்தல்களில், வேதாகம பாடங்கள் தொகுதி 6இல் சொல்லப்பட்ட எங்களது கருத்துக்களை நாங்கள் எதுவும் மாற்றவில்லை.

பிள்ளைகளின் ஆவிக்குரிய படிப்புக்கு பெற்றோர்களே பொறுப்பானவர்கள் என்று தேவன் கூறுவதை நாங்கள் இன்னும் நம்புகிறோம். இதற்காக அவர்கள் விசேஷித்த ஆசீர்வாதங்களை பெறுவார்கள். ஞாயிறு பள்ளிகள் நடத்தினால் அது அநாதை பிள்ளைகள் அல்லது உலக மக்களுக்காக அல்லது வீட்டிலே முன்னரே போதிக்கப்பட்ட பிள்ளைகளுக்காக இருக்கலாம்.

**R4802**

## CONSIDER HIM LEST YE BE WEARIED

## "நீங்கள் சோர்ந்து போகாதபடிக்கு அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்"

"நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்." எபிரேயர் 12:3

"அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என்பது கவனிக்க வேண்டியதாக, மனதில் வைக்க வேண்டியதாக, தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட சோதனைகளையும், எதிர்ப்புகளையும் எப்படி சகித்தார் என்பதை சுலபமாக மறக்கக் கூடாததாக பிரதிபலிக்கக் கூடியதாக காணப்படுகிறது. நமது அனுபவத்தில் கர்த்தருடைய சீஷர்களாக, நமக்கு எதிராக பாவிகளாலும் பாவத்தினாலும் வந்த எதிர்ப்புகளை நாம் சகித்திருக்கிறோம். ஆனால் நாம் இன்னும் இரத்தம் வரை எதிர்க்கவில்லை. அவர் கடந்து சென்ற சோதனைக்குரிய அனுபவங்களை நாம் இன்னும் கடந்து செல்லவில்லை. நமது அண்டை வீட்டாரைப் போல நாம் தரித்திரராகவும் அபூரண ஜீவிகளாகவும் இருக்கும் போது, அவர் பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவருமாய் இருந்தார். பிறகு அவர் பாவிகளால் வந்த எதிர்ப்புகளை பொறுமையுடன் சகித்தது நம்மிடத்தில் பிரதிபலிப்பது நல்லது. சோதனையான அனுபவங்கள் அவருக்கு வந்த போது, அவைகள் கொடுத்தவர்களால் வந்தது என்று நினைக்காமல், அவைகள் பிதாவானவரின் மேற்பார்வையில் வந்தன என்று நினைத்தார். ஆகையால் இப்படிப்பட்ட அனுபவங்கள் அவருக்கு வரும்படி தேவன் அனுமதித்திருந்தால், தமது நீடிய பொறுமையுடன் சகித்து தமது விசுவாசத்தை நிரூபிக்க வேண்டியவராயிருந்தார். அவர் கூறியதாவது: "பிதா எனக்கு கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனா?" யோவான் 18:11.

"கர்த்தர் உங்களை சோதிக்கிறார்" (உபாகமம் 13:3) என்பது ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நம்முடன் இருக்கிறது. நமது வாழ்க்கையின் அனுபவங்கில் நமது கர்த்தரின் கருத்தை எடுத்துக்கொள்கிற அளவுக்கு நாம் அமைதியாக இருப்போம். பிதாவானவர் நாம் புரிந்துகொள்ள முடியாத வழிகளில் நமக்கான சோதனை அனுபவங்களை நமது சோதனைக்காகவோ, மற்றவர்களுக்கு நிரூபிக்கவோ அனுமதித்தால், அவருடைய சித்தம் நம்மில் நிறைவேறுவதற்காக நாம் களிகூர வேண்டும். சங்கீதக்காரன் இந்த கருத்தை இப்படியாக கூறுகிறார்.

"என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது,

என் தேவனே, அதை நான் விரும்புகிறேன்."

நாம் இறுதிவரை விசுவாசத்துடன் சகித்தால், பரிசு நம்முடையது. நமது காரியங்களை தேவன் மேற்பார்வையிடுகிறார் மற்றும் நேர்மையாய் நடக்கிறவர்களுக்கு தேவன் நன்மையான காரியங்களை நிறுத்தி வைப்பதில்லை என்பதில் நமது விசுவாசத்தையும் உண்மைத்தன்மையையும் நிரூபித்தால் "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்பதைக் கேட்போம்.

நமது கர்த்தர் உடல் ரீதியான எதிர்ப்புகளை சகித்தார் என்பதை நாம் அறிவோம். ஆனால் "விபரீதங்கள்" என்பதற்கான ஆங்கில வார்த்தையின் சரியான பொருள் அவரது வார்த்தைகளை எதிர்ப்பது என்று பொருள்படும். நாம் நமது கர்த்தரின் காரியத்தை பார்க்கும் போது, ஜனங்கள் சரீர பிரகாரமாக அவரை எதிர்க்காதபடி அவரது வார்த்தைகளை அவரது போதனைகளை எதிர்த்தார்கள் என்று நாம் பார்க்கிறோம். சரீர பிரகாரமாக வன்முறை செய்யவும் கொலை செய்யவும் அவர் ஆசாரியர்கள், செனகரின் சங்கம் மற்றும் போர்ச்சேவகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்பட்டார். அவர் விரும்பியிருந்தால் அதை அவர் எதிர்த்திருக்கலாம்.

### "அவர் வையப்படும் போது, அவர் பதில் வையாமலிருந்தார்"

ஆகையால் அப்போஸ்தலர் அவரது வார்த்தைகளுக்கு எதிர்ப்பை குறிப்பிடுகிறதாக தெரிகிறது. "அவர் வையப்படும் போது பதில் வையாமலிருந்தார்" (1பேதுரு 2:23) என்று பரிசுத்த பேதுரு கூறுவதில் இது குறிப்பிடப்படுகிறது. மூன்றரை வருட கால கிறிஸ்துவின் ஊழியத்தை நாம் கவனிக்கும் போது, அவரது சுவிசேஷம் சர்ச்சைக்குரியதாக ஆக்கப்பட்டு அவர் அவதூறு செய்யப்பட்டார். அவரிடம் பிசாசு இருந்தது என்று யூதர்கள் சொன்னார்கள்; பிசாசுகளைக் கொண்டுதான் அவர் அற்புதங்களை நடப்பித்தார் என்று கூறினார்கள். அவர் தெய்வ நிந்தனையாளர் என்று குற்றஞ்சாட்டப்பட்டார். இந்த விபரீதங்கள் மற்றும் எதிர்ப்புகள் அவர்களைப் பற்றிய நீதியான மற்றும் உண்மையான அறிக்கைகளை அவரிடமிருந்து கொண்டு வந்திருக்கும். அவர் பெற்றிருந்த நல்லவைகளை, சிறந்தவைகளை அவர் அவர்களுக்கு கொடுத்திருப்பார். பிசாசு உங்களிடத்தில் கிரியை செய்கிறான் முதலானவைகளை அவர் அவர்களிடம் சொல்லியிருப்பார். அவரது மொழியாற்றல் அவர்களை சமாளிக்கக்கூடிய திறமையை கொடுத்திருக்கும். அவரது வார்த்தைகளினால் அவரை சிக்க வைக்க அவர்கள் முயற்சித்த போது, அவர்களது வார்த்தைகளைக் கொண்டே அவர்களை சிக்க வைத்தார். அவர் வையவில்லை. அவர் தீமைக்கு தீமை செய்யாமலும் ஏளனத்திற்கு ஏளனம் செய்யாமலும் இருந்தார். இதுதான் சரியான மார்க்கம் என்று அப்போஸ்தலர் காண்பிக்கிறார்.

ஆனால் அனுதின வாழ்க்கையில் அனைத்து வகையான தீமைகளை சொல்லும் போது, அவர்கள் நம்மை வையும்போது, விழுந்து போன மாம்சம் திரும்பி தீமையை சொல்ல நினைப்பது இயற்கையானது. இப்படியாக இவைகள் நமக்கு சோதனைகளாக அமைகிறது. அந்த ஆவிக்கு நாம் இடம் கொடுத்தால், நாம் கர்த்தரின் மார்க்கத்தை பின்பற்றாமல் சத்துருவின் மார்க்கத்தை பின்பற்றுகிறவர்களாவோம்.

சத்துருவால் தாக்கப்படும் போது அவனது ஏஜென்ட்டுகள் யாராயிருந்தாலும், அவர்களது ஏவுகணைகள் ஏதுவாக இருந்தாலும் "அவருக்கு விரோதமாக பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்." நாம் விசுவாசத்தோடு சகித்தால். நமக்கு அவர் தீமை செய்யாமல் அவரது பார்வையில் நமது கீர்த்தியை மட்டுமே அபிருத்தி செய்வார். அவரது நன்மையினி -மித்தம் தேவனால் நீக்கமுடியாத வெளியரங்கமான தீமையை செய்யமாட்டார். அந்த நன்மை "கோதுமையிலிருந்து" பதரையும், களைகளையும் தூற்றுவதாக இருக்கலாம்.

தீமை பேசுதல், புறம் பேசுதல் மற்றும் அவதூறு செய்தல் ஆகியவை தேவனுடைய பிள்ளைகளுக்கு தடை செய்யப்பட்டுள்ளது. தீமையான காரியங்கள் உண்மையாக இருந்தாலும் தீமை பேசுதல் அவருடைய அன்பின் ஆவிக்கு முற்றிலும் மாறானது. அவதூறு பேசுவதை தடுத்தலுக்கு ஒரே

வழி மத்தேயு 18:15-17இல் மிகவும் ஜாக்கிரதையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை பண்ணினவர்களே மிகவும் மோசமான அவதூறு பரப்புபவர்கள்**

முன்னேறிய கிறிஸ்தவர்களில் அநேகர் தெய்வீக கட்டளைகளை அறியாதிருக்கிறார்கள். ஆகையால் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கை பண்ணினவர்களை பெரும்பாலும் அவதூறு பரப்புகிறவர்களாக இருக்கிறார்கள். இந்த தெய்வீக கட்டளை கர்த்தரால் கொடுக்கப்பட்ட விசேஷமாக, குறிப்பாக கொடுக்கப்பட்ட கட்டளைகளில் ஒன்றாக இருக்கிறது. "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப் -பீர்கள்" என்பது இதோடு இணைக்கப்பட்டதாக கருதப்படுகிறது. கர்த்தருடைய கட்டளையாகிய இதைத் தொடர்ந்து மீறுகிறவர்கள் அவருடைய சிநேகிதர் இல்லை என்று நிரூபிக்கிறார்கள்.

கிசுகிசுத்தல், "தீமை பேசுதல்," "புறம் பேசுதல்" ஆகியவைகளை தடுக்கக்கூடிய இந்த விதியை ஜாக்கிரதையாக நாம் கவனிப்போமாக. மேலே குறிப்பிடப்பட்ட மத்தேயு 18:15-17ஐ பாருங்கள். சம்பந்தப்பட்டவர்கள் கூடி பேசுவது, தான் பாதிக்கப்பட்டதாக நினைக்கிற குற்றஞ்சாட்டப்பட்டவர் நேர்மையானவர் என்பதைக் குறிக்கிறது. மேலும் அது குற்றஞ்சாட்டப்பட்டவரை தீமையாக நினைக்காததைக் குறிக்கிறது. காரியங்களை விவாதிக்க தங்களது வழி சரியானது என்று நினைத்து "சகோதரர்களாக" கூடுகிறார்கள். அவர்கள் ஒரே கருத்துக்கு வர பார்க்கிறார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டால் எல்லாம் நல்லது. காரியம் தீர்வுக்கு வந்தது. சமாதானம் நிலவும். உடையும் அச்சுறுத்தல் தவிர்க்கப்பட்டது. யாரும் ஞானவான் அல்ல. பெரும்பாலான காரியங்களில், சம்பந்தப்பட்டவர்களுக்கிடையேயான வெளிப்படையான, திறந்த விவாதம் இணக்கத்தை கொண்டு வரும். இருவருமே நேர்மையானவர்களாக, கர்த்தரின் ஆவியினால் வழிநடத்தப்பட வேண்டும்.

இப்படியாக கர்த்தர் தமது சீஷர்களை நயவஞ்சகமான அவதூறு பண்ணுகிற பாவத்திலிருந்து பாதுகாத்தார். அது சாத்தான் மற்றும் மாம்சீக மொத்த வேலைகளுக்கும் வழிநடத்தி, சத்தியத்திலும் அதன் அன்பின் ஆவியிலும் வளர்வதை தடுக்கிறது. அவதூறுகளை கேட்கிறவர்கள் இப்படியாக அவதூறு பண்ணுகிறவர்களை, அவர்கள் தவறு இழைப்பதை ஊக்குவிப்பவர்கள், அவர்களது தீய செயல்களில் பங்குபெறுகிறவர்களாக இருக்கிறார்கள். ஆண்டவரின் பிரமாணங்களை மீறுவதில் பங்கு பெறுகிறார்கள். உண்மையான தேவனுடைய பிள்ளைகள் அவதூறு பண்ணுகிறவர்களை கவனிக்கக்கூடாது. அவர்களுக்கு கர்த்தரின் வார்த்தையை, அதில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே முறையை சுட்டிக்காட்ட வேண்டும். தேவனைக் காட்டிலும் நாம் ஞானவான்களா? நம்முடைய சொந்த தீர்மானங்களையே நம்பக்கூடாது என்று நமது அனுபவம் போதிக்கிறது. மேய்ப்பரின் சத்தத்தை பின்பற்றினால் மட்டுமே பாதுகாப்பாக இருக்கிறார்கள்.

**நாம் கிசுகிசுத்தலையும் அவதூறையும் கேட்கக்கூடாது**

ஒரு சகோதரனோ அல்லது ஒரு சகோதரியோ மற்றவர்களைக் குறித்து தீமையானதை கொண்டு வந்தால் உடனே அன்புடனும் உறுதியுடனும் நிறுத்துங்கள். "கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்." (எபேசியர் 5:11) ஆண்டவருடைய கட்டளைகளை மீறுவதில் பங்கு பெறுவதை தவிர்த்துவிடுங்கள். அது சபையில் பெரிய தீங்கை ஏற்படுத்தும். ஒரு சகோதரனோ அல்லது ஒரு சகோதரியோ ஆவிக்குரிய காரியங்களில் குழந்தையாக இருந்தால், இந்தக் காரியத்தைக் குறித்த கர்த்தரின் கட்டளையை அவர்களது கவனத்திற்கு கொண்டு வாருங்கள். (மத்தேயு 18:15; 1தீமோத்தேயு 15:19) காரியம் உங்களிடம் வராமல், கேள்விப்பட்டால் உடனே உங்களது மறுப்பை அதிலிருந்து பின்வாங்குவது மூலம் காண்பியுங்கள்.

இந்த காரியத்தைக் குறித்த கர்த்தரின் கட்டளையை கவனத்திற்கு கொண்டு வந்த பின்பும் அவதூறு பண்ணுகிறவர் தீமை பேசுதல், புறம் பேசுதல், தீய அனுமானங்களை கூறுதல் போன்றவைகளில் நிலைத்து இருந்தால், நீ சொல்வதை நான் கேட்கமாட்டேன், கேட்கவேக்கூடாது, நான் கேட்டால் கர்த்தருடைய கட்டளையை மீறி நானும் உன்னைப் போல குற்றவாளி ஆக வேண்டும் என்று கூறி கண்டிக்க வேண்டும். நான் உன்னுடைய கதையை கேட்டால் அதை என்னால் நம்ப முடியாது. ஏனெனில் கர்த்தருடைய வசனத்தை மதிக்காமலும், அவரது திட்டத்தை பின்பற்றாமலும் இருக்கும் கிறிஸ்தவனிடத்தில் கர்த்தருடைய ஆவி குறைவாக இருப்பதை வெளிப்படுத்துவதால், அவனது வார்த்தை நம்பமுடியாததாக இருக்கும். கர்த்தருடைய வசனத்தை திரித்து ஏமாற்றுபவர் உடன் சகோதரரின் வார்த்தைகளையும் செய்கைகளையும் திரித்து, தவறாய் சொல்ல தயங்கமாட்டார். அப்படிப்பட்டவர்களுடனான ஐக்கியத்தை, அவர் தவறை ஒத்துக்கொண்டு திருந்திவிடுவேன் என்று உறுதி கூறும் வரை, நீக்கிவிட வேண்டும். அவதூறு பண்ணுகிறவரின் கூற்றை கேட்கும் அளவுக்குத்தக்கதாக அந்த பாவத்திலும் அதன் விளைவுகளிலும் நீங்களும் பங்குள்ளவர்களாகிறீர்கள். இவ்விதமான "கசப்பான ஒரு வேர்" எழும்பினால் நீங்களும் "தீட்டுப்பட்டவர்களில்" ஒருவராவீர்கள். (எபிரேயர் 12:15)

பரிசுத்தமாயிருங்கள், தேவனிடத்திலும் மனிதரிடத்திலும் குற்றமற்ற மனசாட்சியை பராமரியுங்கள். இருதயத்திலிருந்து ஆரம்பியுங்கள். எந்த விதத்திலும் சிந்தையிலும் வார்த்தையிலும் தீமைக்கு இடம் கொடுக்காதீர்கள். இதை உறுதிப்படுத்த கிறிஸ்து இயேசுவை உங்கள் மனதிற்கு முன்பாக மாதிரியாக வைத்திருங்கள். தீங்கானது உள்ளிருந்தோ, வெளியிலிருந்தோ, உங்கள் மேல் புகுத்தப்படும் போது ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையும்படி ஜெபத்தில் உங்கள் இருதயங்களை அவரிடம் உயர்த்துங்கள். "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக" என்பது தொடர்ச்சியான உங்களது ஜெபமாக இருக்கட்டும். (சங்கீதம் 19:14)

**தெய்வீக சட்டத்தின் கொள்கைகளை பாராட்டுவதை வளர்த்துக்கொள்ளுவோமாக**

வேத வாக்கியங்களின் பல்வேறு குறிப்பிட்ட பிரமாணங்களை பின்பற்ற நாடும் போது தெய்வீக பிரமாணத்தின் கீழ் இருக்கும் கொள்கைகளை அதிகமாக புரிந்து கொண்டு அதன் இணக்கத்திற்கு வர நாடுவோமாக. கர்த்தருடைய வார்த்தைகளில் குறிப்பிட்டு சொல்லப்படாததால், நமது வார்த்தை, எண்ணங்கள் மற்றும் கிரியைகளில் சரி மற்றும் தவறை தீர்மானிக்க இவைகள் நம்மை சாத்தியப்படுத்துகிறது. உண்மையிலேயே, தெய்வீக சட்டத்தின் கொள்ளைகளை புரிந்து கொண்டு அதன் இணக்கத்திற்கு வருகிற அளவுக்குத்தக்கதாக தெய்வீக வார்த்தையின் ஆவியைப் பெற்றுக்கொள்ளுகிறோம். இதைக் குறித்த சங்கீதக்காரனின் சாட்சியத்தைக் கவனியுங்கள். "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம். நீர் உம்முடைய கற்பனைகளைக்

கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்; அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது. உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால்,எனக்கு போதித்தவர்கள் எல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிரு -க்கிறேன். உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படிக்கு, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன். நீர் எனக்கு போதகராயிருக்கிறபடியால், நான் உம்முடைய நியாயங்களை விட்டு விலகேன். உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள். என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆதலால் எல்லா பொய் வழிகளையும் வெறுக்கிறேன். உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." (சங்கீதம் 119: 97-105)

அன்புக்கு மாறாக, கிறிஸ்துவின் சிந்தைக்கு, ஆவிக்கு மாறாக இருக்கும் சர்ச்சைக்குரிய மற்றும் குற்றம் காணக்கூடிய மனோபாவத்தையும் விலக்குங்கள். உலகம், மாம்சம் மற்றும் சாத்தான் மற்றும் அவர்களின் கண்ணிகளை ஜெயங்கொள்ள ஒரு குறிப்பிட்ட அளவு போர் தைரியம் தேவைப்படுகிறது. இந்த போரிடும் மனோபாவம், பாவத்திற்கு விரோதமாக சரியாகவும் ஞானத்துடன் நடத்தப்பட்டால், கர்த்தருக்காகவும் அவருடைய ஜனங்களுக்காகவும், சாத்தான் மற்றும் அவனது அந்தகாரம் மற்றும் மூட நம்பிக்கைகளுக்கும் எதிராகவும் பயன்படுத்தப்பட்டால் முதலாவது நமக்கும் இரண்டாவது மற்றவர்களுக்கும் உதவியாக ஆகிறது. இது வேதவாக்கியங்களில் நல்ல போராட்டத்தை போராடுதல் என்று அழைக்கப்படுகிறது. நமது அதிபதியின் கனம் மற்றும் அவரது ஜனங்களின் சுதந்தரங்களை அன்புடன் பாதுகாக்கும்படி, நீதிக்காகவும் சத்தியத்திற்காகவும் இந்த போராட்டத்தில் தைரியமான வீரர்களாக நாம் அனைவரும் இருக்க வேண்டும்.

### தீமையின் சக்தி பிரதான நற்குணத்திற்கு விரோதமாக போர்த்திறனை ஏற்படுத்தும்

போர்த்திறனின் இப்படிப்பட்ட நல்ல பயன்பாடு இந்த உலகத்தின் அதிபதியை சந்தோஷப்படுத்தாது. அவன் அதை நேரடியாக பயன்படுத்தாமல் தப்பான வழியில் திசை திருப்புவான். இதன் விளைவாக சிலரிடம் நற்குணத்திற்கு விரோதமாக போர்த்திறனை ஏற்படுத்த முயற்சிக்கிறான். அவர்களை எல்லாரிடமும் எல்லாவற்றிற்காகவும் போரிட அவன் ஊக்குவிக்கிறான். சகோதரர்களிடம் அந்தகார சக்திகளுக்கும் மேலாக, பேர் கிறிஸ்தவர்களிடம் அறியாமை மற்றும் குருடர்களாக்குகிற தப்பறை மற்றும் அறியாமைக்கும் மேலாக போரிட ஊக்குவிக்கிறான். உண்மையிலேயே அவனுடைய விருப்பம் நம்மை தேவனுக்கு விரோதமாக போரிடச்செய்வதே ஆகும்.

இந்த விஷயத்தில் நாம் பாதுகாப்பாக இருப்போமாக. முதலாவது நம்மை நாமே நிதானித்து, மற்றவர்களுக்கு முன்பாக இடறுதற்கான கல்லாக இல்லாதபடி பார்த்துக் கொள்ளுவோமாக. நமது சொந்த இருதயத்தின் தவறான ஆவியினிடத்தில் போரிடுவோமாக. அது அற்பங்கள் மூலமாக மலைகளை ஏற்படுத்தவும், அத்தியாவசியமற்றவைகள் மூலமாக சிறைப்படுத்தவும் சர்சைக்குட்படுத்தி நம்மை அப்புறப்படுத்தவும் நாடுகிறது. "பட்டணத்தை பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்." (நீதிமொழிகள் 16:32) சத்தியத்துக்கான நமது பாதுகாப்பு, நமது சுய மகிமையிலிருந்து அல்ல, சத்தியத்தின் மீதான அன்பிலிருந்து கர்த்தரின் மீதான அன்பிலிருந்து, சகோதரர்களாகிய அவரது ஜனங்களின் அன்பிலிருந்து இருக்க வேண்டும். அன்பானது தூண்டும் ஆவியாக இருந்தால், உடன் ஊழியர்கள் அனைவரிடமும் அன்பை, தயவை, பொறுமையை அடக்கத்தை காண்பிக்கும். நாம் "எல்லோரிடமும் சாந்தமாய்" இருப்போமாக. விரைவான மற்றும் சக்தி வாய்ந்த "தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்" வெட்டுதல் அனைத்தையும் செய்யும்.

தீமை, பொறாமை, பகைகள், சண்டைகள் ஆகியவைகளுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடைய இருதயத்தின் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் நிலைமைகள் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். இவைகளுக்கு ஒரு கணம் கூட உங்கள் இருதயத்தில் இடங்கொடுக்காதீர்கள். அவைகள் உங்களுக்கு பெரிய தீங்கை ஏற்படுத்தும்; மற்றவர்களுக்கும் தீமையை ஏற்படுத்தும். உங்கள் இருதயம் உங்கள் சித்தம். உங்கள் நோக்கம், உங்கள் விருப்பம் அனைத்தும் தேவனிடமும் அவருடைய சிருஷ்டிகளிடமும் முழுமையான அன்பு நிறைந்ததாக இருக்க வேண்டும். தேவனிடத்தில் மிக தீவிரமான அன்பும் அவரது ஆவியை உடையவர்கள் மற்றும் அவருடைய வழியில் நடக்கிறவர்களிடத்தில் அதற்கேற்றாற் போல் அன்பு உடையவர்களாக இருக்க வேண்டும்.

### மனசாட்சியை மட்டுமே நம்பியிருக்க வேண்டாம்

மனசாட்சி மட்டுமே போதுமான வழிகாட்டியாக இருக்குமானால், வேத வாக்கியங்கள் உங்களுக்கு தேவையிருக்காது. பெரும்பாலான ஜனங்கள் மனசாட்சி இல்லாதவர்களைப் போல இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் மனசாட்சியை வழிநடத்த கொடுக்கப்பட்ட தேவனுடைய பிரமாணம் மற்றும் கொள்ளைகளுக்கு குருடாயிருக்கிறார்கள். 1 தீமோத்தேயு 4:1 சொல்லப்பட்டவை -களைக் காட்டிலும் மோசமாக இருக்கிறார்கள். கட்டாய தேவைக்கும் வெளிச்சத்தின்படி நடக்கவும் கர்த்தருடைய வார்த்தையை ஜாக்கிரதையாக கவனிப்பது அவசியம்.

நமக்கு எதிராக இவ்வளவு சொல்லப்பட்டிருக்கிறதே என்று உணர்ந்து ஓட்டத்தை விட்டு விட வேண்டுமோ என்று நமது மனம் அதைரியம் அடையவோ, மனந்தளரவோ கூடாது. மாறாக, சகலத்தையும் நமது நன்மைக்கு ஏதுவாக நடத்துகிற பிதாவானவருக்கு தெரியாமல் எதுவும் நடக்காது என்பது நமது கர்த்தரைப் போல நமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. இப்படியாக நமது கர்த்தர் அவரது மேன்மைக்கு தயார்படுத்தப்பட்டார். நமது பல்வேறு அனுபவங்களை சரியானபடி அப்பியாசப்படுத்தி, நமது வழிநடத்துதலுக்காக கொடுக்கப்பட்டுள்ள பிரமாணங்களை முடிந்தவரை பின்பற்றினால், அவதூறுகள், தூஷணங்கள், நீதிக்கான எதிர்ப்புகளை கண்டாலும், நமது கர்த்தருக்கு செய்யப்பட்டது போல நமக்கும் ஆசீர்வாதத்துக்கு ஏதுவாக நடக்கும்.

எவ்வளவு பேர் பரிசை இழக்கும் ஆபத்திலும் சோர்விலும் இருக்கிறார்கள்! ஏனெனில் கர்த்தர் எதிர்ப்புகளை எப்படி

உண்மையுடன் சகித்தார் என்பதை அவர்கள் கவனிக்கத் தவறியிருக்கிறார்கள். பூரணாயிருந்த கர்த்தர் நீதியினிமித்தம் எந்த விதத்திலும் அநியாயமாக பாடுகளை அனுபவித்தார் என்பதையும் தாங்கள் அபூரணர் என்பதையும் கவனித்து, நன்மை, செய்வதில் சோர்வடையாமல், "இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர் சேவகனாய் தீங்கு அனுபவிப்பார்கள்." அவர்கள் "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடுவதை" தொடருவார்கள்.

"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப் போல் (சபை) சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார்."

**R4804**

## SIN NOT WITH YOUR TONGUE

## உன் நாவினால் பாவம் செய்யாதே

" என் நாவினால் பாவம் செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கி வைப்பேன்." சங்கீதம் 39:1

நமது பொதுவான எண்ணங்கள், நமது பொதுவான உரையாடல் மற்றும் பேச்சைப் பொறுத்தே இருக்கிறது. ஆகையால் தனது இருதயத்தை சரியானபடி கட்டுப்படுத்தக்கூடியவர்கள் தனது வார்த்தையை அடக்கி ஆள்வார்கள். நமது வழிகள் கர்த்தருக்கு பிரியமாயிருந்தால், நமது வழிகள் நீதியின் வழிகளாயிருந்தால், இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். அது கேட்கிறவர்களுக்கு லாபம் அடையும்படி இருக்கும். வழிகள் சரியாக இருந்தால் பேச்சும் சரியாக இருக்கும். பொதுவாக ஜனங்கள் தங்கள் மேல் பிரியமாயிருந்து, தங்களைக் குறித்து கசப்பாகவோ அல்லது அன்பில்லாமலோ எதையும் பேசுவதைத் தவிர்ப்பார்கள். ஆனால் அயலானை வெறுப்பவன் அவர்களைக் குறித்து வெறுப்பாகவோ அல்லது கசப்பாகவோ மிகவும் சுலபமாக கூறுவார்கள்.

நாவானது மிகவும் பயனுள்ள அங்கங்களில் ஒன்றாக இருந்தாலும் அதற்கு ஒரு கடிவாளத்தை, ஒரு காட்டுப்பாட்டை, ஒரு கட்டுப்படுத்தும் சக்தியை வைப்பது அவசியம். நாவினால் நமது தேவனை கனப்படுத்தலாம் அல்லது நாம் அவரை துதிக்கலாம். நீதிமானோடு நாம் இருப்பதைக் காட்டிலும் துன்மார்க்கனோடு இருக்கும் போது நாம் இன்னும் காவலோடு இருக்க வேண்டும். ஏனெனில் துன்மார்க்கனின் எண்ணங்களும் போக்குகளும் தீமையை நோக்கியே இருக்கும். பொல்லாதவர்களோடோ அல்லது அவர்களது பிரசன்னத்தில் இருக்கும் போது நாம் இழிவுப்படுத்தும் செல்வாக்கோடு இருக்கிறோம். அப்படிப்பட்ட சமயங்களில் அனுதாப மனப்பான்மை அவர்களது நாவுக்கு கடிவாளம் போடுவதில் சிரமங்களை காண்கிறார்கள். ஆனால் நல்ல காரியங்களைக்கூட துன்மார்க்கனிடம் பேசுவதற்கு கடிவாளம் போடுவதற்கு நல்லது. ஆனால் நீதிமான்களிடம் நாம் தாராளமாக பேசலாம். கர்த்தர் போதிக்கிறதாவது: "உங்கள் முத்துக்களை பன்றிகள் முன் போடாதேயுங்கள்; ... திரும்பிக் கொண்டு உங்களைப் பீறிப்போடும்." (மத்தேயு 7:6)

உலகப்பிரகாரமாக தீயவர்கள் என்று சொல்லப்படக் கூடியவர்களைத் தவிர வேத வாக்கியங்களின்படி துன்மார்க்கர் என்று அழைக்கப்படக்கூடிய இன்னொரு வகுப்பார் இருக்கிறார்கள். அவர்களுக்கு தேவனைப் பற்றிய அறிவு இருந்தும், அவருக்கு எதிரான நிலையை எடுப்பவர்கள். யூதாஸ் இந்த வகுப்புக்குரியவனாக இருந்தான். ஆகையால் நம்மைச் சுற்றி எதிரிடையான மனோபாவம் உடையவர்கள் இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியில் பங்குள்ளவர்களாயிருந்து, தங்களது முதுகை "வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறவருக்கு" காட்டுகிறவர்களைக் காட்டிலும் குற்றம் கண்டுபிடிக்கிறவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் துன்மார்க்கனாய் இருந்து குற்றங்காணும் மனோபாவத்தில் இருப்பார்கள். நாம்எவ்வளவு தான் ஜாக்கிரதையாக இருந்தாலும், அவர்கள் நம்முடைய வார்த்தைகளை திரித்து கூறி நாம் சொல்லாததை சொன்னதாக கூறுவார்கள்.

வேத வாக்கியங்களின் எச்சரிக்கை நாவிற்கு எதிராக மாத்திரம் இல்லாமல், நமது நாவுகளை பயன்படுத்தி மற்றவர்களுக்கு எதிராக நமது சக்தியை அப்பியாசப்படுத்துவதையும் எச்சரிக்கிறது. அனுபவமுள்ள எவரும், நாவானது நன்மைக்கோ அல்லது தீமைக்கோ சரீரத்தின் வேறு எந்த உறுப்பைக் காட்டிலும் ஆற்றல் வாய்ந்தது என்பதை ஒத்துக்கொள்ளுவார்கள்.

### கர்த்தருடைய ஜனங்களுக்கிடையே நாவானது அநேகந்தரம் தீமைக்குரிய சக்தியாக இருக்கிறது

குதிரையின் வாயிலுள்ள கடிவாளம் குதிரையின் பலத்தைக் கட்டுப்படுத்துவது போல, ஒரு சிறிய சுக்கானானது ஒரு கப்பலின் திசையை மாற்றும். அது போல நாக்கு, பேனா, அதன் பிரதிநிதிகள் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ அநேக எண்ணிக்கையிலான ஜனங்களை கவரும். நாவானது எவ்வளவு முக்கியத்தும் வாய்ந்தது பாருங்கள்! அதை நாம் நன்மைக்கு பதிலாக தீமைக்கு எவ்வளவு அதிகமாக பயன்படுத்துகிறோம். நீதியையும் சமாதானத்தையும் உற்பத்தி செய்பவைகளை விதைக்கிறதற்கு பதிலாக அதிருப்தியையும் முரண்பாட்டையும் விதைக்கிறோம்! இது உலக ஜனங்களிடையே விசேஷமாக உண்மையாக இருந்தாலும், தேவனுடைய ஜனங்களிடையேயும் உண்மையாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தான் ஒரு போதகர் என்பதை நினைவிற்கொண்டு, சத்தியம், நீதி மற்றும் சமாதானத்தை நாம் முன்னேற்றுகிறோம் அல்லது தடை பண்ணுகிறோம் என்பதை உணர வேண்டும்.

கொடூரமான இந்த உலகத்தில் நாவானது ஒரு "நெருப்பாக" இருக்கிறது. அது விழுந்து போன ஆசை மற்றும் விருப்பங்கள் அனைத்தையும் தூண்டிவிட்டு, முழு சரீரத்தையும் தீட்டுப்படுத்துகிற கோபம், பொறாமை, பகைகள், சண்டைகளை எரிக்க முடிவிராததற்கு காரணமாகிறது. நாவை, இரண்டாம் மரணமாகிய கெஹன்னாவிற்கு உருவகமாக ஒப்பிட்டு அப்போஸ்தலர் கூறுவதில் ஆச்சரியமில்லை. அது அதை பயன்படுத்துகிறவர்களை மாத்திரமல்ல மற்றவர்கைளையம் எரிக்க வல்லது.

அபூரண ஜீவிகள் வார்த்தையிலும் கிரியைகளிலும் எப்பொழுதுமே பூரணராக இருக்கமாட்டார்கள். நாம் எவ்வளவு முயன்றாலும் சில சமயங்களில் வார்த்தையிலும் செயல்களிலும் நாம் தவறிவிடுகிறோம். நமது வார்த்தைகளிலும் நமது செயல்களிலும் பூரணமாயிருப்பதற்கு எச்சரிக்கை மற்றும் உண்மையான முயற்சியுடன் நாட வேண்டும். எனினும் ஒவ்வொரு வீணான வர்த்தைக்கும் நியாயந்தீர்ப்பு நாளில் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

### தினமும் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்

ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாகிய, நமது கடமைகளை அனுதினமும் சோதிக்கும் போது, நமது வார்த்தைகள் கர்த்தருக்கு அவமதிப்புடையதாக இருப்பதாக கண்டால், "ஒருவன் பாவஞ்செய்வானால் நீதிபராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." (1யோவான் 2:1) என்பதை நாம் நினைவு கூரவேண்டும். நமது

பரிகாரியின் நாமத்தில் கிருபாசனத்தை நாம் நாட வேண்டும். நமது பரம பிதாவானவரிடம் நமது தவறை உணர்ந்ததை விளக்க வேண்டும். நமது பரிசுத்த நடக்கையிலும் உரையாடலிலும் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதில் தோல்வியடைந்ததற்காக நமது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்து தண்டிக்காதபடி பாவத்தை மன்னிக்கும்படி கிறிஸ்து மூலம் கேட்க வேண்டும். தாழ்மையாக அவரது விலையேறப்பெற்ற இரத்தமே அனைத்து நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பாக இருக்கிறது என்பதை அங்கீகரிக்க வேண்டும்.

இப்படியாக நமது ஒவ்வொரு தேவையற்ற வார்த்தைக்கும் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். மன்னிப்புக்கான வார்த்தைகள் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் புண்ணியத்தின் துணையோடு கேட்கப்பட வேண்டும். அப்பொழுது நாம் விடுவிக்கப்படுவோம். இல்லையென்றால் கர்த்தருக்கு அவமதிப்பை உண்டு பண்ணும் தேவையற்ற வார்த்தைகள் நமக்கு எதிராக நின்று கண்டனம் செய்யும் . நாம் அனைத்து விளைவுகளையும் அனுபவிக்க வேண்டும். முதல் விளைவு சுய தீங்கு. ஒவ்வொரு தீய சிந்தனை அல்லது வார்த்தையும் குணலட்சணத்தை கடினப்படுத்தி அநீதியை நோக்கி அதிகமாக சாயப்பண்ணும். இரண்டாவது விளைவு மற்றவர்களுக்கு ஒரு தவறான முன்மாதிரியை ஏற்படுத்துகிறோம். அவர்களிடத்தில் தீமையை தூண்டி விடுகிறோம். “மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.” (நீதிமொழிகள் 15:1) இப்படியாக அநீதியான அல்லது அன்பற்ற வார்த்தைகள் நம்மைச் சுற்றிலும் சிரமங்களை தூண்டிவிடும். அது நீதியை பழிவாங்கும் ஏஜெண்டாக ஆகும். அது நமக்கு சுய கட்டுப்பாட்டையும் மற்றவர்களின் உணர்வுகள் மற்றும் கருத்துக்களை கவனிக்கும் பாடத்தையும் போதிக்கும்.

சோதனைகள் வருவதற்கு பெரும்பாலும் கர்த்தர் (அல்லது சாத்தான்) குற்றஞ்சாட்டப்படுகிறார். இவைகளெல்லாம் நமது தவறுகளினிமித்தம் வருகிற இயற்கையான பலன்கள். இதற்கெல்லாம் காரணம் தாங்களே என்பதை அறியாமல், சோதனையை அற்புதமாய் தங்களிடமிருந்து விலக்கும்படி வீணாய் ஜெபிக்கிறார்கள். தீவிரமான சுய ஒழுக்கம் மற்றும் வசனத்திற்கு கீழ்ப்படிதல் மூலம் இவைகளை அவர்களே தவிர்க்கலாம். “நம்மை நாமே நிதானித்து (திருத்திக் கொண்டால்) அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும் போது உலகத்தோடே ஆக்கினைக்கு -ள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தராலே (நமது தவறுகளின் மூலம் நமக்கு கொடுக்கப்படுகிற அனுபவங்களினால்) சிட்சிக்கப்படுகிறோம்.” (1கொரிந்தியர் 11:31,32)

### தங்களைக் காட்டிலும் மற்றவர்களை குறை கூறுவதே விழுந்துபோன சுபாவத்தின் மனோபாவம்

கஷ்டங்கள், தேவன் அல்லது சாத்தானால் ஏற்படுத்தப் -படவில்லை. (“அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்”) நம்முடைய பொறுமையின்மையும் அஜாக்கிரதையான வார்த்தை அல்லது செயல் மற்றவர்களின் தவறுகளினால் தான் என்று நினைப்பதும், யாரையாவது குற்றம் சொல்வதும் இயற்கையான சுபாவம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். “ஒவ்வொருவரும் என்னைப் போல் சரியான மற்றும் பெருந்தன்மையான சுபாவம் உடையவர்களாக இருந்தால், நமது குடும்பம் அல்லது சபை கூடுகை அல்லது சமூகம் பூமியிலே ஒரு மெய்யான சொர்க்கமாக இருக்கும்” என்ற எண்ணத்தில் எவ்வளவு பேர் தங்களை வஞ்சித்து உற்சாகப்படுத்திக் கொள்ளுகிறார்கள்! பிரியமானவர்களே, நம்மை நாமே சோதித்துப் பார்ப்போமாக; சுய புகழ்ச்சி மற்றும் சுய திருப்தி இல்லாமல் மிகவும் தாழ்மையாக இருப்போமாக. அதை நாம் இருதயத்தில் கொண்டு வந்தால், அதை நீக்காவிடில், நாம் கண்டனத்துக்குள் வருவோம்.

“உங்களை சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்கு பலன் என்ன? பாவிகளும் தங்களை சிநேகிக்கிறவர்களை சிநேகிக்கிறார்களே. உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், உங்களுக்கு பலன் என்ன? பாவிகளும் அப்படி செய்கிறார்களே.” (லூக்கா 6:32,33) “நாம் அநியாயமாய் பாடுபட்டு உபத்திரவங்களை பொறுமையாக சகித்தால்,” அந்த உபத்திரவம் தேவனுக்கு பிரியமான சுகந்த வாசனையான பலியாக இருக்கும். “நீங்கள் குற்றம் செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால், அதினாலே என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும் போது, பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு பிரீதியாக இருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள்.” (1பேதுரு 2:19-21) பிரியமானவர்களே, நமது பாடுகள் நீதியினிமித்தம் மாத்திரமே இருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ளுவோமாக. நமது பிறப்பினாலேயோ, நாம் வளர்ப்பினாலோ ஈடுபட்ட குற்றங்களுக்கான துன்பங்களுக்காக தேவனையோ, பிறனையோ நாம் குற்றப்படுத்தாதிருப்போமாக.

நாம் இப்போது தேவனுடைய நீதிமன்றத்திற்கு முன்னால் நிற்கிறோம் என்கிற உண்மையின் கருத்தில் நாம் உண்மையான தேவனுடைய ஜனங்களாக இருந்தால் “நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்” (2பேதுரு 3:11) என்பதை உணர நாம் அதிகமதிகமாக முயற்சி செய்ய வேண்டும். தேவ பக்தி, தீங்கு விளைவிக்கும் வீண்பேச்சையும் பரிசுத்தமற்ற நடக்கையும் நேர்மையற்ற அல்லது கலகமூட்டும் வார்த்தைகளையும் சேர்த்துக் கொள்ளாது. நாம் அனுதினமும் தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதையும் வருத்தப்பட்டிராத வீண் வார்த்தைகள் நம் கணக்கில் இராதபடி உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் நினைவில் வைப்போமாக. அதனிமித்தம் மன்னிக்கப்படாதவைகள் நமக்கு எதிராக நிற்காதபடி பார்த்துக்கொள்ளுவோமாக. “நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்.”

### பரிசுத்த சிந்தைகள் பரிசுத்தமான வார்த்தைகளைக் கொடுக்கும்

“உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ள -வைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைக -ளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.” (பிலிப்பியர் 1:27;4:8) இப்படியாக இருதயத்தின் பொக்கிஷத்திலிருந்து நாம் சத்திய வார்த்தைகளை நிதானமாக பேசுவோம். நமது விழுந்துபோன சுபாவத்தின் போக்குகளைத் தாழ்த்தி, தெய்வீக மற்றும் பரிசுத்தமான நடக்கையின் மூலம் தேவனை மகிமைப்படுத்துவோம். “புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள்.” (1பேதுரு 2:12)

நாம் அனுதினமும் தேவனிடம் நமது கணக்குகளை ஒப்புவித்து, வரக்கூடிய ஒவ்வொரு நாளிலும்

ஜெயங்கொள்ளும் வல்லமைக்காக அவரது கிருபையை நாடினால், நியாயந்தீர்ப்பில் நாம் விடுவிக்கப்பட்டு, கிறிஸ்துவின் மூலம் தேவனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்பட்டவர்களாக, அவரது பரிசுத்த ஆவியின் சாட்சியத்தை நமது ஆவியுடன் பெற்று, நாம் அவருக்கு பிரியமானவர்களாகவும் ஏற்புடையவர்களாகவும் இருப்போம். ஆகையால் பிரியமான சகோதரர்களே, "நம் நாவினால் பாவம் செய்யாதபடிக்கு நமது வழிகளை காத்துக்கொள்ளுவோமாக." (சங்கீதம் 39:1) நாவைக் காட்டிலும் சக்தியுள்ளது, செல்வாக்குள்ளது எதுவும் கிடையாது. ஒரு நல்ல வார்த்தை, ஒரு நல்ல எண்ணத்தின் செல்வாக்கு உலகளாவியதாக ஆகும். தீய வார்த்தை அதன் செல்வாக்கு உலகத்தின் முடிவு வரை பரவும்.

**R4813**

## WORLD'S HATRED

## உலகத்தால் வெறுக்கப்பட்டவர்

"என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால், ஆச்சரியப்படாதிருங்கள். உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களை பகைக்கிறதற்கு முன்னே என்னை பகைத்தது என்று அறியுங்கள்." 1யோவான் 3:13; யோவான் 15:18

நமது மாபெரும் போதகருக்கு வந்த அதே வகையான பகைமையே நமக்கும் வரும் என்று இங்கே அவர் நமக்கு காண்பிப்பதாக தெரிகிறது. அவரது அனுபவங்களைப் பார்க்கும் பொழுது, ஜனங்களில் மிகவும் பிரபலமானவர்கள், செல்வாக்குள்ளவர்களாலே பிரதானமாக வெறுக்கப்பட்டார் என்று நாம் பார்க்கிறோம். விசேஷமாக வேதபாரகர்கள் அவரை வெறுத்தார்கள். இன்னும் பரிசேயர்கள், பிரதான ஆசாரியர்கள் மற்றும் சதுசேயர்களும் அவரை வெறுத்தார்கள். இந்த வெறுப்பு பொதுவான ஜனங்களிடமும் பரவியது. தாழ்ந்த வகுப்பினர் எப்பொழுதுமே உயர்ந்த வகுப்பினரால் வழிநடத்தப்பட்டனர். ஏழையான பரிசேயர்கள், உயர்ந்த பரிசேயரால், ஏழையான சதுசேயர்கள் உயர்ந்த சதுசேயரால் வழிநடத்தப்பட்டனர். பொதுவான ஜனங்கள் ஏன் கர்த்தரை வெறுத்தார்கள் என்று சரியான காரணம் சொல்லப்படவில்லை. அவர்கள் தங்களது தலைவர்களின் சொல்கேட்டு, கர்த்தர் ஒரு ஏமாற்றுக்காரர், மோசக்காரர் என்று நினைத்து அவரை வெறுத்தார்கள். அவர்கள் தங்கள் தலைவர்களை மதிக்கிற அளவுக்குதக்கதாக, அவர்கள் வெறுத்தவர்களை இவர்களும் வெறுத்தார்கள்.

இந்த காலத்திலும் அப்படியே இருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களிடம் காண்பிக்கப்படுகிற வெறுப்புக்கு பின்னாலிருக்கிற நோக்கங்களை நாம் காண முடிகிறது. பிரபலமானவர்கள் யாரும் தீயவர்களாக பார்க்கப்படவில்லை. அரசியல் மற்றும் மதத்தின் மூலமாக தங்களையே நீதிமான்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடிய பொதுவான மனநிலை அங்கு இருந்தது. காரணமில்லாமல் கரத்தருடைய ஜனங்களை வெறுக்கக்கூடியவர்களின் பொய் மற்றும் முறைமைகள் மூலமாக அவர்களது பாசாங்கு வெளிப்படுத்தப்பட்டதை நாம் காண்கிறோம். ஆகையால் தவறும் , பெருமையும் உலக மதத்தோடு இணைப்பையும் பெற்றிருந்தவர்களிடமிருந்து சத்தியம் வரும் போது, அது அவர்களுக்கு கண்டனமாக ஆனது. அப்போஸ்தலர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு போனதால், அவர்களைப் பற்றி கூறப்பட்டதாவது: "உலகத்தை கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்." (அப்போஸ்தலர் 17:6)

இயேசுவின் கருத்துக்கள் எல்லாம் ஆழமாகவும் இருதயத்தை தொடக்கூடியதாகவும் இருக்கிறது. இவை எல்லாம் அவர்களுக்கு இசைவாக இருக்கவில்லை, ஒப்பிடுவதற்கு தகுதியற்றதாக காணப்பட்டது. ஆகையால் மத போதகர்களாக இருந்தவர்களில் அநேகர், சத்தியத்தை அவதூறு செய்யவும், இழுக்குண்டாக்கவும் நசுக்கவும் வெறுப்பு மற்றும் பொறாமையினால் தூண்டப்பட்டார்கள். ஆனால் இந்த போதகர்கள் எல்லாம் சோதிக்கப்பட்டார்கள்; அவர்கள் நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் மற்றவர்கள் வஞ்சிக்கபட்டார்களோ அல்லது இல்லையோ அவர்களது மாய்மாலம் கர்த்தருக்கு வெளியரங்கமாயிற்று, ஆகையால் இன்றைக்கும் நமது கர்த்தரின் நாட்களில் இருந்தது போல, இருளானது வெளிச்சத்தை வெறுக்கிறது.

### "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்"

நமது கர்த்தர் விளக்குவதுபோல, தீமை மற்றும் பாவத்தின் இருளானது சத்திய ஒளியை நேரடியாக எதிர்க்கிறது. அந்த காரத்தினின்று அவரது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்த பரலோகத்திலிருக்கிற அவர்களது பிதாவை மகிமைப்படுத்தும்படி அவரது ஜனங்களின் வெளிச்சம் பிரகாசிக்கும்படி உயர்த்தப்படும் போது, இருளான உலகத்தில் எதிர்ப்பை, விரோதத்தை எழும்பச் செய்து, இருளோடு இப்படியாக இணக்கமாக இருப்பவர்கள் தொந்திரவையும், சங்கடத்தையும் அடைவார்கள். அதனிமித்தமாக அந்தகாரத்தையும், தீமையையும் பல்வேறு ரூபங்களில் பாவத்தையும் சிநேகிப்பவர்கள் வெளிச்சத்தை வெறுப்பார்கள். வெளிச்சத்திடம் வரமாட்டார்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளை, அறிவைப் பெற்றவர்களை, வெளிச்சத்தை சுமப்பவர்களை மறைமுகமாகவோ,வெளியரங்கமாகவோ எதிர்ப்பார்கள். நீதிநெறி அசுசியாகிய கடுமையான அந்தகாரத்திலிருந்து வெளியேறி நாகரீக சீர்த்திருத்தம் மற்றும் நீதி நெறி சீர்த்திருத்தத்தின் வெளிச்சத்துக்குள் சென்றவர்கள் கூட உண்மையான சுவிசேஷத்தின் தெளிவான, ஆராயும் வெளிச்சத்தை சகிக்க முடியாது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவான இருளை விரும்புவார்கள். (யோவான் 3:20)

வெளிச்சத்துக்கும் அந்தகாரத்துக்கும் இடையேயான இந்த முரண்பாடினிமித்தம், தேவனுடைய பிள்ளைகள், வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று கூறிக்கொண்டவர் –களினால் நமது கர்த்தர் பாடுபட்டார். அவர்கள் சிறிதளவான வெளிச்சத்தையே பெற்றிருந்தனர். நமது கர்த்தரை ரோமன் கவர்னர் அல்லது ரோமன் சேவர்களோ தவறாக நடத்தவில்லை. ஏனெனில் அவர் வெளிப்படுத்தின வெளிச்சத்தை உணர்ந்து கொள்ள முடியாத அளவுக்கு முழுவதுமாக இருளிலிருந்தனர். அவரை குற்றப்படுத்தியவர்கள் கொஞ்சமாவது வெளிச்சத்தை பெற்றிருந்தவர்களே. ஆனால் அவர்கள் மேல் பிரகாசித்த மகா வெளிச்சத்தை (ஜோதியை) வெறுத்தார்கள்.

அதே போல, இந்த சுவிசேஷ யுகம் முழுவதும். உலகில் எரிந்து பிரகாசிக்கிற விளக்காக இருந்தவர்கள், சிறிது வெளிச்சம் பெற்றிருந்தவர்கள் மூலமாக வெறுக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள். துன்புறுத்தியவர்களின் வெளிச்சம்,

கர்த்தருடைய அர்ப்பணம் செய்தவர்கள் மற்றும் பரிசுத்த ஆவியின் மாபெரும் வெளிச்சத்தை ஒப்பிடும் போது இருளாக இருந்தது. இப்படியாக நமது கர்த்தரின் சாட்சியம் நிறைவேறியது. "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களை பகைக்கிறதற்கு முன்னே என்னை பகைத்ததென்று அறியுங்கள்." "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." (யோவான் 15:18; 1 யோவான் 3:13; 2 தீமோத்தேயு 3:12) நீதியினிமித்தம் பாடுகளை அனுபவிக்கும்படி தற்காலத்தில் கர்த்தருடைய பின்னடியார்கள் அழைக்கப்படுகிறார்கள். இது நியாயமானது அல்லது சரியானது என்பதற்காக அல்ல. அவரது ஜனங்களை சோதிக்கவும், நிரூபிக்கவும், மெருகேற்றவும், தீமைகளை அனுமதிக்க விரும்புகிறார். அவரது அங்கங்களை எதிர்க்கவும், துன்பப்படுத்தவும் அவர் அனுமதிக்கிறார். இப்படியாக அவரது தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அவரினிமித்தம் ஊழியம் செய்யவும், எதிர்கால ஊழியத்திற்கு தயார்படுத்தவும் செய்கிறார். இப்படியாக, சரீரமாகிய சபையை துன்பப்படுத்துகிறவர்கள், தலையானவரை துன்பப்படுத்தினவர்கள் செய்தது போல தெய்வீக திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒத்துழைக்கிறார்கள்.

**"உலகம் உங்களைப் பகைத்தால் அது ஆச்சரியமல்ல"**

கர்த்தரை பின்பற்றுகிறவர்கள், தங்களது தலைவரைப் போல சத்தியத்திற்காகவும் நீதிக்காகவும் ஒரு உறுதியான நிலையை எடுக்கும்போது பலன்கள் அதே போலவே இருக்கின்றன. சாத்தான், அவர்களது இரக்கமற்ற சத்துரு, பல்வேறு வகைகளில் அவனது ஆவியின் செல்வாக்கின் கீழ் இருக்கிற உலகத்தின் மூலமாகவும் தன் மூலமாகவும் அவர்கள் துன்பப்படவும் எதிர்க்கப்படவும் வேண்டும் என்பதே அவனது நோக்கமாக இருக்கிறது. இந்த நிலையை எடுத்த பிறகு கிறிஸ்துவினிமித்தம் உலகம் அவர்களைப் பகைத்தாலும், தீமையான மொழிகளை அவர்களுக்கு எதிராக தவறாக பேசினாலும், தேவனுடைய ஜனங்கள் ஆச்சரியப்படக்கூடாது. அவர்கள் எவ்வளவு பிரபலமானவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு எதிராக தவறாக பேசினாலும், தேவனுடைய ஜனங்கள் ஆச்சரியப்படக்கூடாது. அவர்கள் எவ்வளவு பிரபலமானவர்களாக இருந்தாலும், அவர்களுக்கெதிராக தாக்குதல் கொடுமையானதாக இருக்கும். மாபெரும் சத்துரு அவர்களை மேற்கொள்ள மிகவும் ஆவலாக இருப்பான்.

சாத்தான் நம்மை எதிர்க்கிறான் மற்றும் நாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மாத்திரமல்ல, துரைத்தனங்கள், அதிகாரங்கள் பொல்லாத ஆவியின் சேனைகளோடு நாம் போராடுகிறோம் என்கிற இந்த கருத்து நம்மை திகிலூட்டவில்லையா? இன்னொரு வகையில் சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும் இதே நேர்மறையான தீர்மானம் எடுத்தால் காணக்கூடாத சக்தியிடமிருந்து பெரிய உதவியையும் ஆதரவையும் பெறுவதை உணருங்கள். நாம் நேர்மறையாக சோதனையை எதிர்க்கிற மற்றும் கர்த்தருக்காகவும் அவரினிமித்தம் நேர்மையாக நிமிர்ந்து நிற்கும் அந்த கணத்திலிருந்து கர்த்தரிலும் அவரது சத்துவத்திலும் நாம் பலமடைகிறோம். நமக்கு எதிராக இருக்கிற எல்லாரிலும் நமக்காக இருக்கிறவர் பெரியவர் என்பதை நாம் நினைவுகூருவேமாக. (மத்தேயு 5:11; எபேசியர் 6:12; 1யோவான் 4:4)

நமது கர்த்தருக்கு பிரதானமான எதிர்ப்பு மதத்தலைவர்கள் மற்றும் வேத போதகர்களிடமிருந்தே வந்தது. வெளி நாடுகளில் சபையும் நாடும் இணைந்திருப்பது போல உலகப்பிரகாரமான மற்றும் அரை மதவாதமும் இணைந்திருந்தால் சில சமயங்களில் முழுமையடைகிறது. மற்ற சமயங்களில் சபையும் தேசமும் இணைந்திராத இந்த நாட்டைப்போல அது முழுமையடையாமலிருக்கிறது. எனினும் அரசியல்வாதிகள், பேராசிரியர்கள் மற்றும் மத ஆதரவாளர்களின் ஆதரவை விரும்புகிறார்கள். அவர்கள் தங்களது அரசியல் செல்வாக்கில் பெருமை தேடிக்கொள்கிறார்கள். இந்த செல்வாக்கை அவர்களது சொந்த அனுகூலத்திற்கு பயன்படுத்த நாடுகிறார்கள் அல்லது "நன்மைக்காகவே" என்று கூறுவார்கள். ஆகையால், சபைக்கும் அரசியலுக்கும் நேரடியான ஐக்கியம் இல்லாதிருந்தால், அங்கே ஒரு இணைப்பு மறைமுகமான இணைப்பு இருக்கிறது. அரசியல்வாதிகள் சமூகத்தின் நீதிநெறி மற்றும் மதத்தலைவர்கள் இன்னும் மற்றவர்களின் ஆதரவை விரும்புகிறார்கள். இப்படியாக இந்த உலகத்தின் அதிபதியும், மதம் மற்றும் அரசியலும் ஒன்றாக இழுத்துக்கொள்ளப்பட்டு, ஒருவரையொருவர் பற்றிக் கொண்டிருக்கின்றனர். அவர்களது விருப்பம் ஒன்றே. ஆகவே, கர்த்தரும் அவரது அங்கங்களாகிய சீஷர்களும் தயவின்றி பார்க்கப்பட்டு, வெறுக்கப்பட்டு, துன்புறுத்தப்படுகின்றனர். ஏனெனில் சத்திய விளக்கம், தெய்வீக நிலைப்பாட்டிற்கு எதிரான தப்பறைகளையும், பசாங்குத்தனத்தையும் வெளிப்படுத்துகிறது. ஆமென்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்
வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.
கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures. com
**FOR PRIVATE CIRCULATION ONLY**